Day Class
Physics: திரு. சத்தியசீலன்
Chemistry: திரு. மகேசன்
Zoology: திரு. நாகநாதன்
Botany: திரு குமாரதாசன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
New Master Institute
B.M.C. Lane, Jaffna

சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

மலர் 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு புரட்டாதி மீ 11 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 முஹர்றம் பிறை 22 (27-09-1986) SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY இதழ் 36

நடைபெறுகிறது!
A/L 87 Day Class
பிரிவு I
8.00 - 9.00 CHEMISTRY
9.00 - 10.00 PHYSICS
10.00 - 11.00 ZOOLOGY
11.00 - 12.00 BOTANY
(PURE & APP
10.00 - 12.00 (MATHS
New Master Institute
B.M.C. Lane, Jaffna.

கருத்துக் கலசம்

மயூரா

ஆயுள்வேதம் வளர்ப்போம்

இது விஞ்ஞான யுகம். விஞ்ஞான யுகத்திலும் கம்பியூட்டர் காலம் 'ரெறோபோ' — இயந்திர மனிதன் காலம் விண்வெளியைக் கைப்பற்றுவதற்கும் போட்டி நடக்கும் காலம்.

ஆராய்ச்சிகள் மிகுந்துவிட்டன, அவற்றால் ஆபத்துக்களும் மலிந்து விட்டன (பலன்களும் இல்லாமல் இல்லை.) மனிதனின் செயற்கை வாழ்வு மோகத்தால் இயற்கை மாசடைந்து விட்டது. சுற்றுச் சூழல் அசுத்தமடைகிறது. அதனால் பல புதிய நோய்கள் மனிதர்களை ஒழிப்பதற்குக் கங்கணம் கட்டி நிற்கின்றன.

'எயிட்ஸ்' என்பது ஆகப் பெரிய ஆபத்தான நோய். அதனைப் பரப்பும் வைரஸ் வேற்றுக்கோளில் இருந்து வந்ததாகக் கூடச் சொல்லுகிறார்கள். அம்மைநோய் உலகில் இப்போது குறைந்து விட்டது. அது மீண்டும் ஒருமுறை பெருமளவில் வந்து மனித இனத்தை அழிக்கும் அபாயம் உண்டு. இப்படி எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

எது எவ்வாறாயினும் மனிதனின் முதலாவது எதிரி நோய். மனிதன் என்ன, உயிரினங்கள் தோன்றிய நாள்முதல் அவற்றுக்கு முதல் எதிரியாக விளங்குவது நோய்களே.

நோய்கள் மனிதனின் ஆயுளுக்குச் சவால். அதனால் நோயைத் தீர்க்கும் வேதம், ஆயுள்வேதம் என அழைக்கப்படுகிறது. அந்த வேதம் இயற்கை வைத்தியம். மேல்நாட்டு நவீன வைத்தியம் வருவதற்கு முன்னர் கிழக்குலகில் மக்களை நோய்களில் இருந்து காப்பாற்றியது அந்த வைத்தியமே.

இன்னமும் அந்த வைத்தியம் தனது மகிமை குன்றாமல் ஒளிவீசியும் நிலைத்து வருகிறது. உடன் நிவாரணம் கொடுக்கும் வில்லைகளையும், குளிசைகளையும் நாடுவோர் கூட நீண்டகால நிவாரணத்திற்கு ஆயுள்வேதத்தை நாடுகிறார்கள்.

குளிசைகள், கூடுகள், வில்லைகள், கலவைகள் உடனடி நிவாரணம் தந்தாலும் உடம்பைக் கெடுக்கின்றன. பல பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன. சுதேச வைத்தியம் - ஆயுள்வேத வைத்தியம் அப்படியல்ல நோயை ஆறுதலாகவே தீர்த்தாலும் உடலுக்கு உறுதியும் தருகிறது.

மேற்கு உலக நவீன வைத்தியத்தை ஒதுக்கவேண்டும் என்பதல்ல. அதற்காக எமது பாரம்பரிய வைத்திய முறையைச் சீரழிய விடவேண்டும் என்ற அர்த்தமும் இல்லை.

புதிய ஓட்டத்தில், புதிய உத்வேகத்தில் ஆயுள்வேதத்துக்கும் புதுவேகம் கொடுக்கப்படவேண்டும். அத்

(8ம் பக்கம் பார்க்க)

நாளாந்தம் எண்ணிக்கை உயர்வு:

சிறை உண்ணாவிரதிகள் 27 பேர் நிலை கவலைக்கிடம்

கைவிடுமாறு விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, செப். 27

பூஸா, வெலிக்கடைச் சிறைகளில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களில் மொத்தம் இருபத்தேழு பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறியப்படுகிறது.

வெலிக்கடையில் பதினொருபேர் நிலை மிகவும் ஆபத்தாக இருந்தது. அவாகள் அவசர சிகிக்சைக்காக இராணுவ ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படடனர்.

பூஸாவில் உண்ணாவிரதம் இருப்போரில் பதினறு பேர் தொடர்ந்து மயக்கமடைந்த நிலையில் ஆபத்தாக இருப்பதாக அறியப்படுகிறது.

எனினும் உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

பூஸா, வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது

வெலிக்கடையில் எழுபத்துநான்குபேர் சாகும் வரை உண்ணாவிரதத்தில் குதித்திருக்கிறார்கள்

இவர்களில் 11 பேரின் நிலை கவலைக்கிடமானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பதினொரு பேரும் அவசர சிகிச்சைக்காக இராணுவ ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்

பூஸாவில் உண்ணாவிரதப்போரில் குதித்திருக்கும் 96 பேரில் 16 பேர் தொடர்ச்சியாக மயக்கமடைந்த நிலையில் இருந்தனர் என்று தெரியவருகிறது

(8 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

27—9—1986
சனிக்கிழமை
சுபநேரம்:
3.02 முதல் 4.32 வரை
ராகுகாலம்:
9.02 முதல் 10.32 வரை
இவை [illegible] பொருந்தும்

வானத்தாக்குதலில் மேற்கு ஜேர்மனிய பொறியியலாளர் பலி!

திருகோணமலை, செப். 27

கடந்த வியாழன் மாலை திருகோணமலை பகுதியில் இறக்கக்கண்டியில் நடந்த ஹெலிகொப்டர் தாக்குதலில் மேற்கு ஜேர்மன் பொறியியலாளர் ஒருவர் உயிரிழந்தார்.

திரியாவெளிப் பகுதியில் வியாழன் காலையில் ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே மோதல் இடம்பெற்றது.

பின்னர் மாலையில் தாக்குதல் நடந்த பிரதேசத்தைச் சுற்றியுள்ள பகுதியில் வானத் தாக்குதலை ஆயுதப்படையினர் மேற்கொண்டனர்.

தாக்குதல் நடந்த பகுதியில்தான் மேற்கு ஜேர்மன் அரசு அமைத்து வரும் வானொலி நிலையம் உள்ளது.

அந்த நிலையத்தில் பணிபுரிந்த இந்தப் பொறியியலாளர், ஹெலித் தாக்குதலில் உயிரிழந்தார். தாக்குதல் நடந்த சமயம் இவர் அப்பகுதியூடாக நடந்து சென்று கொண்டிருந்தாராம்.

வானத் தாக்குதலின் இறக்கக்கண்டி வாடியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமியா என்ற முஸ்லிம் நபர் காயமடைந்தார். (உ.எ.150)

தமிழ் மொழி மாநிலத்தை பெற்றுத்தர இந்தியா உறுதி

புதுடில்லி, செப் 26

இலங்கைத் தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய விதத்தில் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மொழி மாநிலம் பெற்றுத்தருவதில் இந்திய அரசு உறுதியாக இருப்பதாக தமிழர் அமைப்புக்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வார இறுதியில் டில்லியில் முக்கியமான ஆலோசனை

இந்திய அரசின் உயர்மட்ட வட்டாரங்கள் இந்த உறுதிமொழியை வழங்கியிருக்கின்றன என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன

தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய—அவர்கள் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் சுயமரியாதையுடனும் வாழக்கூடிய—தீர்வு ஒன்றே இலங்கை இனப்பிரச்சினைக்குக் காணப்படவேண்டும் என்று இந்தியா, இலங்கை அரசுக்கு அழுத்தம் கூறி வந்துள்ளதும் தெரிந்ததே.

இந்த நிலையில் — மூன்றும் கட்டப் பேச்சுக்களுக்கு பூர்வாங்க நடவடிக்கையாக இந்திய அரசு அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்த தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழு இன்று மாலை (வெள்ளி) புதுடில்லி பயணமானது.

குழுவுக்கு கட்சியின் செயலாளர் நாயகம் திரு அமிர்தலிங்கம் தலைமை வகிக்கிறார் ஏனைய உறுப்பினர்கள் வருமாறு;

(8ஆம் பக்கம் பார்க்க)

கமாண்டோக்கள் மூவர் பலி!

யாழ்ப்பாணம், செப்.27

புதன்கிழமை காலை மட்டக்களப்பு மகா ஓயாவுக்கும் 19 ஆம் கட்டைக்கும் இடையில் கவசவாகனங்களிலும், ஏனைய வாகனங்களிலும் வந்த கமாண்டோக்களை விடுதலைப் புலிகள் தாக்கியதில் 3 கமாண்டோக்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

இராணுவம் வெளியே வந்தது

யாழ்ப்பாணம்,செப்,27

காங்கேசன்துறை இராணுவ முகாமிலிருந்து கவசவாகனம் ஒன்றில் இராணுவத்தினர் நேற்று வேகமாக மாவிட்டபுரம் சந்தி வரை வந்து சென்றனர்

வெளியே வந்த இராணுவத்தினரை நோக்கி சென்றியில் இருந்த போராளிகள் 'கிரனேட்' வீசித் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

நிலக்கண்ணியில் லொறி சிக்கியது

2முஸ்லிம், 1தமிழர்பலி

திருகோணமலை, செப்.27

நேற்றுப் பிற்பகல் உப்புவெளியில் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் இருமணல் கூட்டுறவுச் சங்க லொறி ஒன்று சிக்கியது

லொறியில் வந்த இரண்டு முஸ்லிம்களும் ஒரு தமிழரும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்.

கப்புவெளி 3-ஆம் கட்டைச் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த லொறிச் சாரதி ஆர் வேலாயுதமும் மீராசாஹிபு என்பவரும் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

உயிரிழந்தவர்கள் விபரம் வருமாறு:

1. நாகூர்பிச்சை (23 வயது)
2. அவ்வா உம்மா (வயது 70)
3. அடையாளம் தெரியாத தமிழர் ஒருவர்.

(உ-எ-150)

மட்டுநகர் தாக்குதலில்

5 படையினர் பலி! பலர் காயம்!

ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 27

மட்டக்களப்பில் மட்டுநகர் திருகோணமலை வீதியில் வைத்து கடந்த புதன்கிழமை காலை 11 மணியளவில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவாகிய மக்கள் விடுதலைப் படையினர் நடத்திய 'ஹோன் சார்ஜ்' (Horn Charge) தாக்குதலில் ஐந்துக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தாக்குதல் அண்மையில் மட்டுநகரில் 48 அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டதற்கு பதிலடியாகச் செய்யப்பட்டதாகவும் —

இத்தாக்குதலில் பொதுமக்களுக்கோ போராளிகளுக்கோ எவ்வித சேதமும் இல்லை எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மட்டுநகரில் உள்ள வவுணதீவு இராணுவ முகாமின் பலத்தினை அதிகரிக்கும் முகமாகவும் — போராளிகளின் முகாம்களை நிர்மூலமாக்கும் நோக்குடனும் —

ஏற்கெனவே எம்மால் தகர்க்கப்பட்ட வலையிறவு பாலத்தை திருத்தியமைக்கும் நோக்குடன் மட்டுநகர் இ.போ.ச. பஸ்களுக்கு சொந்தமான பாரம்தூக்கி இயந்திரத்தை எடுத்து வருவதற்காகவும் சென்ற இராணுவத்தினர் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது — இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

ஆளுங்கட்சி பிளவுபடும்?

கொழும்பு, செப் 27

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடும் நிலை உருவாகியிருப்பதாக நம்பகமாக அறியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகாலமாக நிலவிவந்த கருத்துவேறுபாடு தற்போது உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதாகவும் — கட்சியின் தலைமைப் பீடத்தின் போக்கில் அதிருப்தி அடைந்திருக்கும் பல முக்கிய பிரமுகர்கள் கட்சியை விட்டுப்பிரிந்து போய் புதிய கட்சி ஒன்றை அமைக்க முயற்சித்து வருவதாகவும் அறியவருகிறது.

இதேவேளை மாகாண சபை யோசனையை விரும்பாத பல அரசாங்கக் கட்சி எம் பிக்கள் இரகசியமாகக் கூட்டம் ஒன்றைக் கூடி அடுத்த நடவடிக்கை குறித்து

(8ஆம் பக்கம் பார்க்க)

யாழ்நகரில் போராளிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப் 27

யாழ் கோட்டை முகாமில் இருந்து வியாழன் இரவு வெளியேற முயன்ற சிப்பாய்களை நோக்கி போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

நள்ளிரவு வேளையில் நடைபெற்ற இத் துப்பாக்கிச் சமரில் சிப்பாய்கள் தரப்பில் சிலர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது. (உ-10)

சிமெந்து தொழிற்சாலையில் இராணுவம்

யாழ்ப்பாணம்,செப்27

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலைப் பகுதியிலும் நேற்று இராணுவத்தினர் நடமாடினர்,

போராளி ஒருவரை இராணுவத்தினர் சிமெந்து ஆலைப் பகுதியில் வைத்துப் பிடிக்க முயன்றதாகவும்—

எனினும் அவர் தப்பிச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

கான்ஸ்டபிள்கள் நால்வர் கைது

கொழும்பு, செப் 27

யாழ்ப்பாணம் போகும் லொறிகளின் சாரதிகளிடம் லஞ்சம் வாங்கினர் என்ற புகாரின் மீது அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் நேற்று கைது செய்யப்பட்டனர். (உ.எ)

படுகாயம்

திருகோணமலை, செப். 27

திருகோணமலை நகரில் கடந்த புதன் அதிகாலை பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அலி அக்பர் என்ற மனநோயாளி படுகாயமடைந்தார்.

திருமலை உட்துறைமுக வீதியில் இச் சம்பவம் இடம்பெற்றது

(உ-எ-150)

ஆலங்கேணியில் ஹெலி தாக்குதல்

திருகோணமலை, செப் 27

ஆலங்கேணிக் கிராமத்தில் நேற்றுக் காலை அரை மணி நேரம் வரையில் ஹெலிகொப்டர் தாக்குதல் இடம் பெற்றது

இத்தாக்குதலினால் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்த விவரங்கள் எதுவும் நேற்று மாலை கிடைக்கவில்லை.

அந்த நேரத்தில் 'மங்கி பிரிட்ஜ்' என்ற இடத்தில் இடம்பெற்ற போராளி - சிப்பாய் மோதலைத் தொடர்ந்து ஆயுதப்படையினர் நடத்திய ஹெலிகொப்டர் தாக்குதலில் வள்ளம் ஒன்றில் கிண்ணியா சென்று கொண்டிருந்த இரண்டு முஸ்லிம்கள் காயமடைந்தனர்.

(உ-எ-150)

சர்வோதய

பிரமுகர் கதிரமலை நேற்று சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், செப் 27

சர்வோதய இயக்கத்தின் வட பிராந்திய வெளிக்கள இயக்குநர் திரு. க. கதிரமலை நேற்றுக் காலை ஈரோஸ் இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக் காலை பதினொரு மணியளவில் வான் ஒன்றில் ஆயுதம் தாங்கிய இளைஞர்களினால் கொண்டு வரப்பட்ட இவர் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில் முனீஸ்வரர் வீதியில் உள்ள மின்கம்பம் ஒன்றுடன் நிறுத்தப்பட்டார்.

அதன் பின்னர் அவரது தலையை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

மூளை சிதறிய நிலையில் மரணமான கதிரமலையின் சடலத்தை, இளைஞர்கள் தாம் கொண்டு வந்த பிரேதப் பெட்டி ஒன்றில் போட்டு வானில் கொண்டு சென்றனர்

போராளிகள் பற்றிய தகவல்களை அரசுக்குக் கொடுக்கும் உளவு வேலைக்கு உடந்தையாகச் செயற்பட்டார் என ஈரோஸ் அமைப்பு திரு கதிரமலைக்கு எதிராகக் குற்றம் சாட்டி அறிக்கை ஒன்று வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

அர்ச்சனா
கல்வி — முயற்சி — பெருவாழ்வு
உதயன் நிறுவனத்தின்
உன்னதமான
மூன்றுவது வெளியீடு!
உள்ளங்களைக் கொள்ளைகொண்டு
உங்கள் இல்லத்தில் இடம்பிடிக்க
வித்தகனாய் வருகிறான் விரைந்து!
அவன் வரவை விரைவில் எதிர்பாருங்கள்!!

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

தமிழர்களுக்குத் தனியான மாநிலம் வழங்குவதில் ஏன் இந்தத் தயக்கம்?

திரு. ஆர் எம் பி. சேனநாயக்கா கொழும்புத் தினசரி 'த ஐலண்ட்' செப்டம்பர் 24 இதழில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

ஏன் ஒன்பது மாகாண சபைகள்? தமிழருக்கு ஒரு மாநிலம், ஏனைய பகுதிகள் ஒரு மாநிலமாக பிரிக்கப்பட்டுத் தீர்வு காணப்படமுடியாதா?

அதிகாரப்பரவலாக்கல் பேச்சுக்களுக்கு முன்னர் தமிழ்மாநில எல்லை நிர்ணயப் பேச்சுக்கள் தான் முதலில் நடத்தப்பட வேண்டும் —இப்படிக் கூறியிருக்கிறார் திரு சேனநாயக்கா.

திரு. சேனநாயக்கா, பிரபல சிவில் சேவை (சி. சி. எஸ்) அதிகாரியாகப் பணியாற்றியவர். கடைசியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் இயக்குநர் நாயகமாகப் பணிபுரிந்தார்

அரசாங்கம் கூட்டணியுடன் மாகாண சபை பற்றி நடத்தும் பேச்சுக்கள் 'எருதுக்கு முன்னால்வண்டியைநிறுத்தும்' தன்மையானது என்பது தற்போது நன்றாகத் தெரிகிறது.

தமிழர் கோரிக்கையின் தன்மை தெளிவானது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்துத் தமிழ் மொழி மாநிலம் ஒன்றைத் தமிழர் கோருகின்றனர்.

யாழ் குடாநாட்டின் கட்டுப்பாட்டை வெற்றிகரமாகத் தங்கள் கைகளுக்குள் தமிழர் எடுத்துக் கொண்டுள்ளனர்

பிரிவினைக்குப் பதிலாக சுயாட்சி வழங்குவதன் மூலம் எப்படி இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என்பது குறித்துத் தான் அரசாங்கம் பேச்சுக்கள் நடத்த வேண்டும்.

சுயாட்சி வழங்கப்படவுள்ள மாநிலத்தின் எல்லைகளை நிர்ணயிப்பது குறித்துப் பேச்சுக்களை நடத்துவதுதான் முதல் வேலையாக இருக்க வேண்டும். அத்துடன், போராடும் தமிழர்களை அரசியல் வானுக்குள் கொண்டு வரும் உடன்பாடு ஒன்றைச் செய்வதுமாகும்

இதை விடுத்து வடக்கு, கிழக்கு இணைப்புக் கிடையாது என்ற சுலோகத்தைத் தொடர்ந்து உச்சரிப்பது இது விஷயத்தில் உதவுமா?

பிரச்சினை குறித்த முக்கியமான விஷயங்களிலேயே அரசாங்கம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

தமிழர், தங்களுக்கு என்றொரு நிலம் கேட்டுப் போராடுவது தான் இன்று பிரதான விஷயமாக உள்ளது.

கிழக்கு முஸ்லிம்கள் கருத்து

முஸ்லிம் மக்களின் அணுகுமுறையினால் இது விஷயம் குழப்பம் நிறைந்ததாக உள்ளது.

ஆனால் இது விஷயத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் கருத்துக்களையே கவனத்துக்கு எடுத்தல் வேண்டும்.

அரசாங்கம், தமிழ் அமைப்புக்கள், கிழக்கு மாகாண முஸ்லிம் அமைப்புக்கள் - இம்மூன்றும் சேர்ந்து பேச்சுக்களை நடத்தலாமே!

கிழக்கு மாகாணத் தமிழரும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து தீர்வு காண்பதற்கு விட்டால், அரசாங்கத்துக்கு இன்னும் இலகுவாக இருக்கும்.

தமிழ்மொழி மாநிலத்தில் இருந்து சிங்களக் கிராமங்கள் சந்தேகத்துக்கு இடமின்றி பிரிக்கப்பட வேண்டும். இது தமிழர் கோரிக்கையை ஏற்பதாகவும் இருக்கும். அதே நேரத்தில் இந்தச் சிங்களக் கிராமங்களை நன்கு பாதுகாக்கவும் முடியும்.

எல்லை நிர்ணயமே பிரதானமானது

இந்த எல்லை நிர்ணயப் பிரச்சினைதான் அடிப்படையானதும் உணர்ச்சிபூர்வமானதுமாகும். இதைத்தான் முதலில் பேசி இருக்க வேண்டும்.

மாநில எல்லை நிர்ணயமேமுக்கியம்; அவலை நினைத்து உரலை இடிப்பது பொருந்தாது

தமிழ்ப் போராளிகளுடன் பேச்சுக்கள் நடத்துவது அவசியமில்லையா?

தமிழ் மொழி மாநில எல்லைகளை அவர்களும் ஏற்கவேண்டும். எல்லைகளைப்பற்றி பேசி முடிவு கண்ட பின்னர்தான் என்ன மாதிரியான சுயாட்சி என்பது குறித்துப் பேசவேண்டும். அதுவே பொருத்தமானது.

ஏனைய சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய எல்லை நிர்ணயத்தை ஏற்றுக்கொள்ள போராளிகள் மறுப்பின் மாகாணசபை பற்றிய பேச்சுக்கள் பொருத்தமற்றவையாகி விடும்

எதிர்க்கட்சியும் இதைத் தான் சுட்டிக் காட்டுகிறது. போராளிகள் எல்லைகளை மட்டும் ஏற்பதுடன் நிற்காது, முழு இலங்கை அரசியல் வரையறைக்குள் உட்பட்டதாக அந்த அமைப்பை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும்.

எல்லைகளுடன் இலங்கையின் ஒரு பகுதியாக இருக்க அவர்கள் சம்மதிக்கவும் வேண்டும்.

இந்த இரண்டு விஷயங்கள் குறித்தும் தான் பேச்சுக்கள் நடத்தப்பட்டாக வேண்டும்.

இதை விடுத்து மாகாண சபை குறித்து பரந்த திட்டம் ஒன்று விவாதிக்கப்பட்டு வருகிறது.

இது 'அவலை நினைத்து உரலை இடித்த' மாதிரியான பிழையை நாம் விடுவது போல் காணப்படுகிறது

தமிழ் மொழி மாநிலக் கோரிக்கையைத் தான் தமிழர்கள் தொடர்ந்து முன்வைத்து வருகிறார்கள்; அது சம்பந்தமான பேச்சுக்களில் போராளிகளையும் கலந்து கொள்ளும்படி கோரி வருகிறார்கள்.

போலிப் பெருமையைக் காட்டி தமிழரின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையுடன் இணைந்து கொள்ள தமிழ்ப் போராளிகள் சம்மதித்தால், இலங்கை

ஆர். எம். பி. சேனநாயக்கா

சமஷ்டி அமைப்பாக விளங்க வேண்டும்

அதிகாரப் பகிர்வு நிச்சயம் சமஷ்டித்தீர்வாக இருக்கவேண்டும் வேறு பெயர்களினால் அதை அழைப்பதால் ஒரு பலனும் ஏற்படப் போவது இல்லை.

சமஷ்டி பற்றி தெரியாது இருப்பவர்களுக்கு அது பற்றி போதிக்கப் படவேண்டும் சமஷ்டி பற்றிய தவறான பிரசாரங்களினால் மக்கள் ஏமாற்றப்பட இடமளிக்கக் கூடாது.

சமஷ்டி அமைப்புக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவும் அது சம்பந்தமாக செயல்படவும் நாம் தயாராக வேண்டும்.

அந்த சமஷ்டித் தீர்வு வடக்கு, கிழக்கில் அமைக்கப்படும். தமிழ் மாநிலத்துக்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் இடையேயானதாக இருக்க வேண்டும்.

இரண்டு சுயாட்சி அமைப்புக்கள் (ஒன்று தமிழர் மாநிலம் மற்றது ஏனைய இலங்கைப் பகுதிகள் கொண்ட அமைப்பு) சம்பந்தப்பட்டதே தீர்வு.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு விசேட அரசு அமைப்புக்கள் உருவாக்கப்படலாம். அது கிழக்கில் உள்ள தமிழரும் முஸ்லிமும் சேர்ந்து பேசிக் காணப்படவேண்டிய விஷயம்.

ஐக்கிய இலங்கைக்குள் இரண்டு மாநிலங்கள் தேவையானதாக இருக்க ஏன் ஒன்பது மாகாண சபைகள்?

இன, மத, மொழி பேதங்களைப் புறக்கணித்து மத்திய ஆட்சி ஒன்றை நடத்த உதவு முகமாகவே மாகாணங்கள் உருவாக்கப்பட்டன.

குளறுபடி ஏனோ?

தமிழருக்கான மாநில சுயாட்சிக் கோரிக்கையை, இலங்கையின் ஏனைய பகுதிகளைச் சம்பந்தப்படுத்தி ஏன் குளறுபடி செய்ய வேண்டும்?

தமிழர் மாநிலம் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளை தகுதியான அதிகாரப் பரவலாக்கல் ஒன்றின் கீழ் நிர்வகிக்க முடியாதா?

ஒன்பது மாகாண சபைகள் திட்டம், நாடு முழுவதும் பல்வேறு வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் என்று கூறப்படும் கண்டனங்களின் காரசாரத்தைக் குறைப்பதற்கு இது உதவும்.

சுதந்திரத்துக்கு சற்று முன்னரும் தமிழ்பேசும் பகுதி தனியாகவே இருந்தது மறந்து போச்சா, என்ன?

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தனித் தனி மாகாணசபைகளை, திருகோணமலை தவிர்த்து, தமிழ்-முஸ்லிம்கள் மத்தியில் இணைக்க ஜனாதிபதி ஜெயவர்த்தனா விரும்புகிறார்.

சேர். டி பி. ஜெயதிலக உள்நாட்டு அமைச்சராக இருந்த காலத்துக்கு திரும்பிச் சென்று பார்ப்போம். திரு டி. எஸ் சேனநாயக்கா, திரு சி. டபிள்யு டபிள்யு கன்னங்கரா ஆகியோர் அப்போது அமைச்சர்களாக இருந்தார்கள்.

இக்காலத்தில்தான் மாவட்டக் காரியாதிகாரி சேவை ஆரம்பிக்கப்பட்டது. முழு இலங்கையும் அப்போது 1. தமிழ்பேசும் பகுதிகள், 2. கண்டிச் சிங்களவர் பகுதி, 3. கீழ் நாட்டுச் சிங்களவர் பகுதி ஆகப் பிரிக்கப்பட்டிருந்தது.

தமிழ்பேசும் பகுதிகளாக திருமலை உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் விளங்கின. இம் மாகாணங்களில் நியமனம் பெற்ற அனைவரும் தமிழர், முஸ்லிம்களே, இந்த இரண்டு மாகாணங்களில் உள்ள பிரிவுகளுக்கே அவர்கள் இடமாற்றம் பெற்று வந்தார்கள்.

இது எதை நிரூபிக்கிறது?

இலங்கையை இப்படி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கும் படி தமிழ், முஸ்லிம் அரசியல் வாதிகள் யாராவது அப்போது நிர்ப்பந்தித்தார்களா?

அப்படியானால் இன்று புதிய கண்டுபிடிப்புக்கள் ஏன்?

ஏனென்றால் தமிழ், முஸ்லிம் மக்களின் பரம்பரைத் தாயகமாக விளங்கிய இப்பகுதி, படிப்படியாக சிங்கள குடியேற்றத் திட்டத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்ததே இன்றைய கண்டுபிடிப்புகளுக்குக் காரணம்!

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர்தான் இந்த ஆக்கிரமிப்பு இடம் பெற்றது.

ஏனைய இனங்களைப் பாதிக்கும் முறையில் தான் பிரிட்டிஷார் நாட்டின் சுதந்திரத்தைச் சிங்களவர்களிடம் ஒப்படைத்தனர்.

இன்றைய அரசியல் வாதிகளுக்கு இது தெரியாதா?

-கே. துரைராஜா

அரசாங்க அலுவலகங்களில்....

சிகதி

அதிகாரிகளும் உதவியாளர்களும்

விதிகள் படிப்படியாக திருத்தப்பட்டு வருகின்றன. மிகுதி வேலைகள் மழைகாலம் தொடங்கும் முன்னர் செய்து முடிக்கப்படும் என நம்புவோமாக. இதனால் பல சிரமங்கள் தவிர்க்கப்படலாம். பிரதான விதிகளில் சந்திகள் விஸ்தரிக்கப்பட வேண்டியது முக்கியமானதாகும். சுய நோக்கங்களை நீக்கி பொது நோக்குடன் பிரதான சந்திகளைத் திருத்த வேண்டியதும் இன்றைய வாகன அதிகரிப்பு நிலையில் கவனிக்கப்பட வேண்டியதொன்று. உப அபிவிருத்தி சபைகளும் மேலும் விதிகளைப் பராமரிக்கும் திணைக்களமும் இதனை ஒன்று சேர்ந்து சிந்திப்பது செயற்பாட்டிற்கு உதவுவதாகும்.

* * *

சில வெளிநாட்டு நிறுவனங்களினால் கொழும்பில் நடத்தப்படும் பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அந்தப் பரீட்சைகளை தொடர்பு படுத்தும் திணைக்களத்தினர் முன்வர வேண்டும். இதே போல் இலங்கை பல்கலைக்கழகத்தினரால் வெளிவாரி மாணவர்களுக்கும் நடத்தப்படும் பரீட்சைகளையும் இங்கே நடத்தினால் என்ன?

* * *

காசோலைகள் மூலம் ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு பல தொல்லைகள். சில பொதுஸ்தாபனங்கள் காசோலைகளை பெற்று பணம் கொடுக்கின்றன. அதிலும் அவர்கள் நடைமுறை ஓர் தனி முறை ஒவ்வொரு மாதமும் காசோலையை மாற்றுவதற்கு எங்கு செல்வது? இதில் வங்கிகள் பொறுப்பு என்னவோ?

* * *

சில திணைக்களங்களில் சில அதிகாரிகளுக்கு அவர்களது உதவியாளர்கள் தெய்வங்கள் போல் விளங்குகிறார்கள். சில சமயங்களில் கடமைக்கு செல்லும் பொதுமக்களை அந்த தெய்வங்கள் கண்ணியமாக நடத்துவதில்லை காரணம் அதிகாரியின் அனுசரணை. சில சமயங்களில் அதிகாரி 'ஆம்' என்றாலும் உதவியாளர் செய்வதில்லை இவையெல்லாம் எப்பொழுது தான் மாறுமோ?

* * *

யாழ்ப்பாணத்திற்கு அப்பாலுள்ள கல்வி மாவட்டமொன்றில் திணைக்களத்திற்கு செல்லும் பொழுது ஆசிரியர்கள் கண்ணியமான முறையில் கவனிக்கப்படுவதில்லை எனத் தெரிகிறது இது போல வேறும் பல. திணைக்களத்திற்குச் சமர்ப்பணம்

* * *

அரச திணைக்களம் ஒன்றிலிருந்து அனுப்பப்பட்ட கடிதத்தின் கீழே ஓர் திகதியும் அதிகாரி கையொப்பமிட்ட இடத்திற்கு இடது பக்கத்தில் வேறு ஓர் திகதியும் போடப்பட்டிருந்தது. இரு திகதிகளுக்கும் இடையில் 5 நாள் வித்தியாசம்.

* * *

சில அரச அதிகாரிகள் மேற்கொள்ளும் கடமைகளின் நிமித்தம் அவர்கள் பொதுமக்களின் ஆதரவைப் பெறும் பொழுது வேறு சில அதிகாரிகளுக்கு அதனைப் பொறுக்க முடிவதில்லை. இது மனித இயல்பு எனினும் நல்லதை செய்யும் எவரையும் போற்றவும் பழகவேண்டும்

பொன்விழாக் காணும் சின்னம்மா வித்தியாசாலை

வட்டுக்கோட்டை சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையில் பொன்விழா நிகழ்ச்சிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றன. அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

1823ல் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து ஓர் பாய்க்கப்பல் வாங்கி அமெரிக்கா மிசனரிமார் குடும்பங்களும் விவாகம் செய்யாத ஆண், பெண் இருபாலாரும் கொழும்பை நோக்கி புறப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் கல்வி அறிவு. ஞானத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக தெரிந்து எடுக்கப்பட்டவர்கள். 6 மாதமாகக் கடற்பிரயாணம் செய்து கொழும்புத் துறைமுகத்தை வந்து அடைந்தார்கள். அவர்களுடைய நோக்கம் கல்லையும், மரங்களையும், உலோக விக்கிரகங்களையும் வணங்கும் அஞ்ஞானிகளை "கிறிஸ்தவ-புரட்டஸ்தாந்து" மதத்திற்குச் சேர்த்து அவர்களுக்கு வேண்டிய பணம் பொருள் உதவிகளை வழங்கி பதவிகளையும் வழங்கி மதமாற்றம் செய்வதே அவர்களது திட்டமாக இருந்தது.

பிரித்தானிய ஆளுநர் கொழும்பிலோ, காலியிலோ இறங்கக்கூடாது எனத் தடுத்து, விருப்பமானால் காங்கேசன் துறைமுகத்திற்கு போகலாம் எனக் கட்டளையிட்டார். அப்படியே காங்கேசன்துறையில் வந்து தெல்லிப்பளையில் கூடாரம் அடித்துக் குடியேறினார்கள் அங்கே, பைபிள் முதலிய புத்தகங்கள் அச்சிடுவதற்கு ஓர் அச்சகம் நிறுவி தங்களுடைய நடவடிக்கைகளை முன்னேற்றமாக நடத்தி வந்தார்கள்.

ஏறக்குறைய 10ஆண்டுகளின் பின் வட்டுக்கோட்டைக்கு வந்து மட்டக்களப்பு செமினரியைத் தொடக்கி உயர் கல்வி கற்பித்து மிகவும் வெற்றிகரமாக நடத்தி வந்தார்கள். யாழ்ப்பாணத்தில் பெரும் கல்விமான்களையும்; அறிஞர்களையும், வான சாஸ்திர விற்பன்னர்களையும் உருவாக்கினார்கள். 1857ல் இவர்களுள் பலர் சென்னை, கல்கத்தா பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பட்டம் பெற்று தென் இந்திய பிராமண கல்விமான்களை தோல்வியடையச் செய்து முன்னணியில் திகழ்ந்தனர். அவர்களுள் சிறந்தவர்கள் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களும் கரோல் விசுவநாத பிள்ளையும் ஆவர்.

எஸ் ஆர். கனகநாயகம்
(சட்டத்தரணி)

பேராசிரியர் ஹேவ்லாண்ட் அவர்கள் சங்கரத்தையில் ஓர் கிறிஸ்தவ பாடசாலையை ஸ்தாபித்து "சாமுவேல் ஹென்ஸ்மன்" என்ற ஓர் கிறிஸ்தவ தமிழரை அதிபராக நியமித்து இல்லமும் அமைத்து நெறிப்படுத்தி இப்பாடசாலையை ஒழுங்காக நடத்தினார். காலத்துக்குக் காலம் "பாதிரி அம்மா" வந்து வந்து கலர் படங்கள் பின் பக்கத்தில் வேத வசனங்கள் அடங்கிய நிலையில் வழங்கி மதப்பிரசாரங்களை மேற்கொண்டு வந்தனர் இப்படிப் பல ஆண்டுகள் சென்றன.

"சாமுவேல் ஹென்ஸ்மன்" அவர்களின் பின்னர் "சித்தியவான் கணபதிப்பிள்ளை" அவர்களுக்கு பாடசாலைக் காணியையும் வீட்டையும் 1930இல் விற்பனை செய்துவிட்டு கிராமத்தைவிட்டு வெளியேறினர். பாடசாலைகள் தனியார் நடத்துவதற்கு அரச உத்தரவு வழங்கப்பட மாட்டாது. ஓர் கல்வி ஸ்தாபனம் மூலம்தான் நடத்த முடியும். இது இப்படி இருக்க 'இந்து போர்ட்' என். இராசரத்தினம் அவர்களின் சிபார்சுப்படி 10 வருடத்திற்கு மேலான நீண்டகால குத்தகை உடன்படிக்கையை சைவவித்தியா

(8-ஆம் பக்கம் பார்க்க)

கிளர்ச்சித் தலைவனாக ஆரம்பித்து ஆட்சித் தலைவனான லால் டெங்கா

இந்திய வடஎல்லையில் உள்ள மிஸோரம். மலைப்பாங்கான பிரதேசம்.

ஐந்துலட்சம்மக்களே அங்கு வாழ்கின்றனர் 'தங்களை தனித் தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும்; தனி மாநில அமைப்பு தர வேண்டும்' என்றுகடந்த 20ஆண்டுகளாகப் போராடி வெற்றிகண்டவர் மிஸோதேசிய முன்னணியின் தலைவர் லால்டெங்கா.

கிளர்ச்சித் தலைவனாக இருந்து மாநிலத் தலைவனாக மாறியுள்ள லால்டெங்கா பற்றியது இந்தக் கட்டுரை.

1966 ஆம் ஆண்டு பெப்ரவரி 28. நள்ளிரவு மிஸோரத்தின் முதலமைச்சர் நானே - இப்படி அறிவித்துவிட்டு, தலைமறைவான 40 வயது கெரில்லா வீரன்-

தனது 60 ஆவது வயதில் மிஸோரத்தின் சட்டபூர்வ முதலமைச்சர் ஆகின்றார் அவர் தான் லால்டெங்கா.

ஏழைக் குடும்பத்திலே பிறந்த அவர் 8ஆம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிட்டார். பெற்றோர்களினால் அவரின் படிப்புக்கு உதவ முடியாமற் போனதே அதற்குக் காரணம்.

பேராட்டம்

பின்னர் அஸாம் [illegible] படையினர் மிஸோரம் மக்களின் உரிமைகளுக்காக 20 ஆண்டுகள் போராடியலால்டெங்கா, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் கடந்த ஜூனில் உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டார்.

மிஸோரம் உடன்பாடு அதற்குப் பெயர் 'மிஸோரம் உடன்பாடு' இதன்படி மிஸோரம் இந்தியாவின் 23 ஆவது மாநிலமாகிறது.

மிஸோரத்தின் மக்கள் தொகை 5 லட்சம் மட்டுமே.

மொழி

மிஸோரம் மொழி பர்மிய, திபெத்திய மொழிகளின் கலப்பு.

"பஞ்சாப் உடன்பாட்டுக்கு ஏற்பட்ட கதி மிஸோரம் உடன்பாட்டுக்கு ஏற்பட விடமாட்டேன்" என்று உறுதிபடக் கூறும் லால்டெங்கா, மிஸோரம் மக்களின் நன்மதிப்பைப்பெற்றவர்.

பார்த்தசாரதி

மிஸோரம் உடன்பாடு உருவாக முக்கிய பணி ஆற்றியவர்கள் இந்திய வெளியுறவு கமிட்டித் தலைவர் ஜீ பார்த்தசாரதியும் அமைச்சர் நரசிம்மராவும் என்று நன்றி ததும்பச் சொல்கிறார் லால்டெங்கா.

"எனக்கும் திரு.பார்த்தசாரதிக்கும் இடையே 1976 இல் இருந்து நெருங்கிய தொடர்பு உண்டு. திரு.ஜி பி. திறமையான ராஜதந்திரி மட்டுமல்ல இறுக்கமாக பேச்சுக்களை நடத்துவதிலும் வல்லவர்' [illegible] டெங்கா, முதலமைச்[illegible]மையில் உள்ள மிஸோரம் தேசிய முன்னணியை அரசியல் இயக்கமாக மாற்றுவேன். அடுத்த ஆறு மாதங்களில் தேர்தல்களில் பங்குபற்ற எமது முன்னணி தயாராகிவிடும்.

முன்னணி கெரில்லாக்கள் ஆயுதங்களை கீழ

தீபன்ராஜா

வைத்துவிடுவார்கள். சொன்னபடி எமது வீரர்கள் கேட்பார்கள்.

யுத்தநிறுத்தம் பிரகடனம்

1984 இல் யுத்தநிறுத்தம் ஒன்றைப் பிரகடனப் படுத்தினோம். அன்றில் இருந்து இன்றுவரை ஒரு குண்டுகூட எனது 'பையன்'களினால் பாவிக்கப்படவில்லை' என்று கூறுகிறார் லால் டெங்கா.

தடை நீக்கப்பட்டவுடன், எமது முன்னணி வீரர்கள் இந்திய ராணுவத்திலோ அல்லது எல்லைக் காவல் படையிலோ சேரலாம்.

தலைமறைவு வாழ்வின் போது உலகில் பலநாடுகளுக்குச் சென்றேன். அது பற்றி வெளியிட விரும்பவில்லை சிலபேர் நினைக்கிறார்கள் சீனா, பாகிஸ்தான் நாடுகளில் இருந்துநான் உதவி பெற்றேன் என்று அதை எல்லாம் இனிச் சொல்வது பிழை. தலைமறைவு வாழ்வு ரகசியமானதாகவே இருக்கவேண்டும் இப்படிக் கூறும் திரு லால்டெங்கா மிஸோ மக்கள் தனித்தேசிய இனம் என்பதை கெரில்லாப் போர் மூலம் நிரூபித்த விடுதலை வீரன்.

நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கை வங்கியின் 26 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்)

வெளிநாட்டு நாணயம்	இலங்கையில் (ரூபா சதத்தில்)
ஸ்ரேலிங் பவுண்	39.81
அமெ. டாலர்	28.15
இந்திய ரூபா	2.20
மார்க் (ஜெர்மனி)	13.58
கனடா டாலர்	20.03
[illegible]	4.02
பிராங் (சுவிஸ்)	16.75
அவுஸ். டாலர்	17.49

பிரயாண ஒழுங்குகள்

● கனடா
● டென்மார்க்
● ஜேர்மனி
● சவூதி

கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார் இதுவரை எமது பல பயணிகள் விரைவாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் டென்மார்க்கிற்கு அந்நாடு விதிக்கும் தடைகளையும் மீறி எமது முகவர் உங்களை நேரடியாக அழைத்துச் செல்வார்.

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் ஆண்கள், பெண்கள் (குறிப்பாக அங்கு மணம் செய்யவிருப்பவர்கள், மணம் செய்தவர் ஒன்றுகூட) உங்களை எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவிற்கு விதி அமைப்புக்கு உடன் விரைவாக அனுப்பி வைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும். சென்ற மாதம் சவூதிக்கு எம்மிடம் பாஸ்போட் தந்தவர்கள் இந்த மாதம் 18ஆம் திகதி சவூதி சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம்
வீதி,
கோண்டாவில்
கிழக்கு,
கோண்டாவில்:

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் ரூர்ஸ் எனும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.

* ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் கிளை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அணுகுண்டு யுகத்தில்

காந்தி ஏந்திய ஆயுதங்கள்

த. செல்வத்துரை (சட்டத்தரணி)

உலகம் அதர்ம வழியிலே செல்லுமாயின் அதைத் தடுத்து நிறுத்தித் தர்ம வழியிலே நடத்துவதற்கு உலக சக்தியாகிய கடவுள், தான் ஒரு மனித ரூபமெடுத்து மனிதரோடு வாழ்ந்து இன்ப துன்பங்களை அனுபவித்து உலகை ஈடேற்றுவாரென்பது பகவத் கீதையின் முக்கிய போதனைகளிலொன்று.

அப்படியான அவதார புருஷர்கள் அவ்வப்போது உலகிலே தோன்றினார்கள் என்பதைப் பல சமயத்தைச் சார்ந்தோர் நம்புகிறார்கள் என்பது அறியக் கிடக்கின்றது. மனித உருவம் எடுக்காமல் மனிதவர்க்கத்தைக் கடவுள் வழி நடத்த முடியாது.

மகாத்மாகாந்தி மனித உருவத்தில் வந்த தெய்வமோவென்று கோடானுகோடி மக்கள் ஆச்சரியம் அடையும் வண்ணம் தனது வாழ்க்கையை நடத்தினார். அதர்மம் வளராமற் தடுப்பதற்குத் தான் அவர் பிறந்தாரென உலகோர் நம்பினார்கள்.

தான் ஒரு சாதாரண மனிதனென்றே மகாத்மா சொன்னார். தான் அடைந்த நிலையை எவரும் இடமாக அடைய முடியுமென்றுஞ் சொல்லியிருக்கின்றார். அதற்கு வேண்டிய வழி வகைகளையுங் கூறியிருக்கின்றார்.

"உயிர்கள் இடத்தில் அன்பு வேண்டும் தெய்வம் உண்டென்று நம்பிடுதல் வேண்டும்" எனும் சுப்பிரமணிய பாரதியாரின் பாடலுக்கமைய மகாத்மா எல்லா உயிர்களிலும் எக்காலமும் அன்புடையவராயிருந்தார் அத்துடன் உலகில் அழியாத ஒன்று கடவுளென்றே நம்பினார் ஒரு மனிதனின் உயிர் ஓர் ஆட்டுக் குட்டியின் உயிரிலும் பார்க்க எவ்வகையிலும் உயர்ந்ததல்ல என்றும் கூறினார்

அன்பும் அகிம்சையும்

அணுகுண்டு யுகத்தில் மகாத்மா கையேந்திய ஆயுதங்கள் அன்பும் அகிம்சையும் ஆத்மீக சக்தியுந்தான். இவ்வாயுதங்களைத்தாங்கி இந்தியா முழுவதையும் உலகையுந் தன் கொள்கைகளுக்கு அடிபணியச் செய்தார்.

இவர் எவ்விதம் ஆத்மீக சக்தியைப் பெற்றார்? இவரின் அசைக்க முடியாத தெய்வ நம்பிக்கைதான் இவருக்கு அபாரமான

ஆத்மீக சக்தியைக் கொடுத்தது. இதையே திருவள்ளுவரும்,

'ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே

(7ஆம் பக்கம் பார்க்க)

★

காந்தி

ஜயந்தி

தினம்

2 - 10 - 86

★

அகிம்சை நெறியில் ஆட்சி

அதுவே மகாத்மா சார்ந்த கட்சி

புலவர். நா. சிவபாதசுந்தரனார்

சின்னஞ்சிறு ஊர்களைக் கொண்ட சிறு நிலப்பரப்பையும் - அந்த நிலப்பரப்பில் வாழும் மக்களையும் மகாத்மா காந்தியடிகளின் அகிம்சை மனம் அழகுறப் பிணித்துக் கொண்டது.

இந்தச் சிற்றூர் மக்களின் செருக்கும், சிறப்புக்கும் இந்தியாவின் விடுதலை இயைதல் வேண்டும், அந்த இயைவின் அமைவுக்காகவே தம்மைக் கட்டுப்படுத்தாத - தாம் கட்டுப்படாத மாநிறுவனமாம் இந்திய மாசபையில் 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்று விரிந்தவியன் உலகம் விரைந்து கேட்க அவரது ஆன்மா சத்தியக்குரலை எழுப்பியது.

இந்த ஆன்ம எழுச்சி காந்தியாருக்கு எப்படிப் பிறந்தது?

நிலத்தொடு நிலப் பொருளாய் நின்ற நிலமாந்தரின் நிறை மனமே தம்மனமாய்த் தலைப்பட்ட தகைப்பாடே அவ்வாறு ஆக்கியதாகும். இவ்வாறான காந்தியாரின் கிராம பொதுவுடைமைக் கருத்துக்களில், மேலைத்தேயப் பொதுவுடைமைப் பெற்றியில் தம் அறிவையும் மனத்தையும் பறிகொடுத்தவர் பலர்.

காந்தியடிகளின் பொது நிலையோ - பொதுவுடைமை நிலையோ சிறப்பாக இந்தியாவையும், பொதுவாக இந்தியாவைப்போன்ற உலகநாடுகளையும் உள்ளத்திற் கொண்டே சிந்திக்கப் பட்டதென்பதை மறுக்கவோ - மறைக்கவோ முடியாது

மகாத்மாவின் தனி மனம், தரணியின் மனமாகத் தலைப்பட்டதும் சிற்றூராம் கிராமத்தின் கண்ணே காலூன்றித் தங்கியது. இந்தக் காலூன்றும் கண்ணியம் நேர்மையான அகிம்சையின் தடையற்ற நெறிப் பயன் என்பதைத் தக்கார் எவரும் ஏற்பர்.

உண்மையான இந்தியா

ஒருமுறை பிரித்தானிய நாடாளுமன்றக்குழுவொன்று இந்தியாவிலே தம் ஆட்சியின் உண்மை நிலையை நேர்முகமாக அறிவதற்கு இந்தியாவிற்கு வந்ததும் முதலில் காந்தியடிகளையே கண்டு உரையாடியது. நம் அடிகளார் அவர்களைப் பார்த்து உறுதியாக இறுதியில் உரைத்தது,

'உண்மையான இந்தியாவைப் பார்ப்பதே உங்களது உண்மையான நோக்கமாக இருக்குமானால் கல்கத்தா போன்ற நகரங்களுக்குச் செல்லாது சிற்றூர் பலவுடைய கிராமங்களுக்கே செல்லுங்கள்; அங்கே தான் உண்மையான இந்தியா இருக்கிறது' என்றார்.

இந்த விடையில் நாம் அறிவது என்ன?

மகாத்மாவின் மனித மனம் இந்திய கிராமங்களின் பண்பினிக்

(7ஆம் பக்கம் பார்க்க)

துப்பாக்கியுடன் வந்த பறங்கியரை

கவண்வீசிக் கல்லெறிந்து நிலைகுலைத்தனர்

ம. க. அ. அந்தனிசில்

இந்த முழக்கத்தினால் நல்லூர்ச் சேனைகள் மத்தியில் அதிர்ச்சியும் ஆச்சரியமும்நிலவுகிறது. இதனால் ஆவேசமுற்ற சங்கிலி மன்னன் தளபதியைப் பார்த்து. "வானம் பொய்க்கவில்லை, இடி முழக்கம் கேட்கவில்லை, எதிரிகள் வெடிமுழங்கி வருகின்றார்கள், வெடி" என்று கர்ஜிக்கிறான்

தளபதி: வேந்தே! அதுதான் அவர்கள் வைத்திருக்கும் துப்பாக்கி என்ற தினுசான ஆயுதம்.

மன்னன்: ஆமாம், நாடுபிடிக்க அவர்கள் கொண்டுதிரியும் கொள்ளிக்கட்டை அதுதான்!

தளபதி: அப்படியானால் நமது சேனை அவர்களைச்சடுதியாக நெருங்க முடியாது மன்னா...

மன்னன்: உண்மைதான்...எதிரிகளின் துப்பாக்கிவெடி எத்தனை கஜம் பாயுமென்று நமக்குத் தெரியாது, அவர்கள் அதைப் பாவிக்கும் விதத்தையும் அதன் தன்மைகளையும் இங்கே நாம் நேரில் கண்டறிந்த பின்னர்தான் புதிய உத்திகளை கையாளவேண்டும் அதே சமயம் இப்போதைக்கு நாமும் தூரத்தேயிருந்து தாக்கும் ஆயுதங்களைத்தான் பாவிக்க வேண்டும்.

மன்னன் இவ்வாறு சொல்லியதும் வாட்சேனை அணியிடம் சென்ற தளபதி வாள்களை உறையிலே போடுமாறும் கவண்கல் ஏந்துமாறும் உத்தரவிடுகின்றான் குதிரைகள் இழுத்து வந்த ஆயுத வண்டிகளிலிருந்து கவணும் கற்களும் பெறப்படுகின்றன. ஈட்டிச் சேனையினர் ஈட்டிகளுடன் நின்றுகொண்டிருக்கின்றனர். இப்போது கவண்கல் சேனையினர் முன்னணியில் நிறுத்தப்படுகின்றனர். (வெட்ட வெளித் திடலில் நல்லூர்ச்சேனை வீரத்தை ஆயுதமாகவும் பராக்கிரமத்தைக் கேடயமாகவும் கொண்டு நெஞ்சு நிமிர்த்தி நிற்கிறது)

பெரும் வெடிமுழக்கத்துடன் பறங்கிப்படை போர்க்களத்துக்கு வந்து சேருகிறது ஆணவச் செருக்குடன் அதிகார நடைபோட்டு வந்து குவியும் பறங்கிப்படையினரைக் கண்டு சங்கிலி மன்னன் பற்களை நறும்பிக் கொள்கிறான். அவனது கரங்கள் முறுக்கேறித் துடிதுடிக்கின்றன.

நடைபெறப்போகும் போர் சாதாரண போரன்று யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் போராகும் அதுமட்டுமல்ல, நல்லூர் இராஜதானியின் சரித்திரத்திலே இதுவரை யாரும் போர்க்களத்தில் துப்பாக்கிகளைச் சந்தித்தது கிடையாது சங்கிலி மன்னனும் தளபதிகளும் சேனைகளுந்தான் முதன்முதல் அதைச் சந்திக்கப் போகின்றனர். துப்பாக்கி இல்லாத வெறும் கரங்களுடன் துப்பாக்கிகளைச் சந்திக்கப் போகின்றனர். அதிலும் பறங்கிப்படை மிகவும் பலம் வாய்ந்த படை. முன்னர் கோட்டைக்காட்டு மன்னன் ஒன்பதாம் பராக்கிரம பாகுவையும், சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னையையும் தோற்கடித்த படை. அப்பெரும் படையைத்தான் சங்கிலி மன்னன் வெற்றிகொள்ள வேண்டுமென எண்ணித் துடிக்கின்றான் அந்த எண்ணம் வெறும் வெற்றிக்காகவல்ல, தன் மண்ணைக் காப்பதற்காக எதிரிகளைத் துரத்தியடிப்பதற்காக!

பறங்கியர் கற்பனை

ஆனால் பறங்கியரின் கற்பனை வேறாக சிறகடித்துப் பறக்கிறது. இப்போரில் தாம் வென்றால் யாழ்ப்பாண இராச்சியத்தை அடிமைகொண்டு பொம்மை ஒன்றை அதிகாரத்தில் அமர்த்தி தாம் ஆட்சி புரியலாமெனப் பறங்கியர் நினைத்து நிற்கின்றனர் மன்னனின் குதிரையும் ஒருமுறை கனைத்து நிற்கிறது. தூரத்தே நின்றவாறு பறங்கியரின் செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனிக்கிறான் மன்னன். நல்லூர்ச் சேனையும் பறங்கியரின் செயற்காரியங்களை அவதானித்துக்கொண்டு நிற்கின்றது.

அப்போது பறங்கித் தளபதி அன்ருபூர்த்தாட் பறங்கிச் சேனையிடம் ஏதோ சொல்ல துப்பாக்கி ஏந்திய அணி முன்னணியிலும் வாளேந்திய அணி பின்னணியிலும் வரிசையாய் நிற்கிறது. மற்றும் பல பறங்கியர் துப்பாக்கிகளுக்கு வெடிமருந்து நிரப்பிக் கொடுக்கவண்ணமிருக்கின்றார்கள் (அக்காலத் துப்பாக்கி ஒருவன் துப்பாக்கியைத் தாக்கிப் பிடித்துக் குறி பார்க்க இன்னொருவன் அதன் பற்று வாயில் நெருப்பு வைத்தாலே வெடிக்கும்) பறங்கித் தளபதி அன்ருபூர்த்தாட் மீண்டும் கட்டளையிடுகிறான். அப்போது துப்பாக்கி ஏந்திய அணியினர்

பற்றுவாயில் நெருப்பு வைக்க ஏற்பட்ட தாமதத்தை நல்லூர்ச் சேனை பயன்படுத்தியது

இரண்டு அடி முன்னே சென்று ஒற்றை முழங்காலிலிருந்து நல்லூர்ச் சேனைகளைக் குறிபார்க்கின்றனர்

இது கண்ட சங்கிலி மன்னன் தன் சேனைகள் பக்கம் பாய்ந்து சென்று உடன் அணி கலையுமாறு ஆணையிடுகின்றான் நல்லூர்ச் சேனை அணி கலைந்து பரவிநிற்கிறது. பறங்கியரால் வெடி தீர்க்கப்படும்போது உச்சியும், பதுங்கியும் இடம் மாறிக் கொள்ளும்படி தளபதி வீரமாணிக்க தேவன் உரத்துக் கத்துகிறான்.

பறங்கிப்படை வேட்டுகளைத் தீர்க்கிறது டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!!

துப்பாக்கி வேட்டிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதெப்படியென்பது நல்லூர்ச் சேனைக்கு இப்போது பழக்கமாகிவிட்டது. அது மட்டுமல்லாமல் துப்பாக்கியால் குறிபார்க்கும் போதும் அதன் பற்றுவாயில நெருப்பு வைக்கும்போதும் ஏற்படும் காலதாமதத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நல்லூர்ச்சேனை தயாராக நிற்கிறது.

இப்போது முதலாவட்டம் வேட்டுத்தீர்த்த பறங்கியர் பின்னணிக்குச் செல்கிறார்கள். பின்னணியிலிருந்த பறங்கியர் முன்னணிக்கு வந்து ஒற்றை முழங்காலிருந்து துப்பாக்கியால் குறிபார்க்கிறார்கள். அவ்வமயம் சங்கிலி மன்னனை நோக்கிய பறங்கித் தளபதி அன்ருபூர்த்தாட் "இப்போ நாங்க ரெடி" என்று கத்துகிறான். இது கேட்டு ஆத்திரமுற்ற சங்கிலி மன்னன் தன் புரவியில் சற்று முன்னே வந்து 'இப்போதுதானா' என்று உரக்கக் கேட்டுவிட்டு திடீரென்று தன் கையிலிருந்த கவண்கல்லைச் சுழற்றி 'அப்படியானால்... கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடியின் முதல் கல் இதோ...பிடி" என்று அடிக்கிறான். கவண்கல் விண் கூவிப் பறந்து சென்று துப்பாக்கிப் பறங்கியொருவனின் மண்டையில் 'டொக்' என்று அடித்து குருதி கொட்ட வைக்கிறது தொடர்ந்து நல்லூர்ச் சேனையினர் சிலர் முன் பாய்ந்து சரமாரியாகக் கவண் கல் வீசியடிக்கின்றனர் இதனால் ஒற்றை முழங்காலிலிருந்து துப்பாக்கிக்குறி பார்த்த பறங்கியர் நிலைகலங்கியும், சிலர் காயமுற்றும் எழுந்துநின்று வேட்டுத் தீர்க்கின்றனர்.

(வளரும்)

பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர்அரசு (ஆறு-ஆ)

கூட்டணியும், இந்திய ஆலோசகர்களும் உணராமல் இருப்பது பெருவியப்பு!

மாகாண சபைகளை தமிழ் மக்கள்

ஒருபோதும் ஏற்க மாட்டார்கள்

அ. குமரகுரு

மாகாண சபைகளை போராளிகள் மட்டும் அல்ல, தமிழ் மக்களும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இதனை அனுபவமிக்க தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் இந்திய அரசியல் ஆலோசகர்களும் உணராமல் இருப்பது வியப்பாக உள்ளது.

தெரிந்துகொண்டே தான் இலங்கை அரசின் பலவீனங்களை அறிந்து கொள்வதற்காக, அல்லது வெளியுலகுக்கு வெளிப்படுத்துவதற்காக

நாகரிக அரசியல் தெரியாதவர்கள் தென்னிலங்கை சிங்களத் தலைவர்கள்

பேச்சுக்கள் நடைபெறுகின்றனவா என்றும் எண்ணத் தோன்றுகிறது

ஒற்றை ஆட்சி அமைப்பில் மாகாணசபை முறை இலங்கை முழுவதிலும் அமைக்கப்படவேண்டும் என்பதே இலங்கையின் நிலை. ஒற்றையாட்சி அமைப்பில் ஆக்கவும் அழிக்கவும் பூரண அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

இந்த அமைப்பில் என்னதான் அதிகாரப் பரவலாக்கல் இடம் பெற்றாலும் அதனை ஏற்க தமிழ் மக்கள் முன்வருவார்கள் என்று யாராவது நம்பினால் அவர்கள் எங்கள் மக்களின் இப்போதைய உணர்வுகளை புரிந்து கொள்ளாதவர்கள் என்பதே அர்த்தம்.

போராளிகளின் தியாகத்தின் முன்னால்...

தமிழ்ப் போராளிகளின் வீரமும் சுயநலமற்ற தியாகமும் மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன. போராளிகளின் தியாகங்களுக்கு முன்னால் தாம் அனுபவித்த — அனுபவிக்கும் துன்பங்கள் துச்சமானவை என்று மக்கள் எண்ணுகிறார்கள். நாம் அறிந்த மட்டில் பொதுசன அபிப்பிராயம் இது தான்.

தனிப்பட்டவர்களின் துன்பங்களும் இன்னல்களும் பொறுமையுடன் சகித்துக்கொள்ளப்படுகின்றன. எத்தகைய வசதியீனங்களையும் அனுசரித்துக்கொண்டு போகவும், அபாயங்களை எதிர்நோக்கவும் மக்கள் தங்களைப் பழக்கிக்கொண்டு விட்டார்கள்.

ஆகையால்தான் "இளைஞர் செய்த மாபெரும் தியாகங்களும் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் இத்தனை துன்பங்களும் போயும் போயும் இந்த மாகாண சபைகளைப் பெறுவதற்காகத்தானா?' என்று பரவலாகக் கேட்கப்படுகிறது

இளைஞர்கள் திட்டமிட்ட கொள்கையுடன் செயற்படுவது தெரிகிறது

பொருளாதாரத்தில் நாமும் வங்குரோத்து ஆகிக் கொண்டே இருக்கிறோம்

தமிழ் மக்கள் சூடு கண்ட பூனைகள் போன்றவர்கள். பல சந்தர்ப்பங்களில் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட் [illegible] உரிமைப்போராட்டம் உச்சநிலையை அடைந்துள்ளது. இறுக்கமான இந்த நிலையை, பசப்பு வார்த்தைகளை நம்பி தளரவிட்டால் எமக்கு இனி விமோசனமே இல்லை என்று மக்கள் நினைக்கிறார்கள். அதனால்தான் மக்கள் "போராளிகள் எவ்வழியோ அவ்வழியே எம்வழி" என்று எண்ணத் தலைப்பட்டுவிட்டார்கள் இந்த நிலையில் இருந்து மக்களைத் திசை திருப்புவது இலகுவான காரியம் அல்ல.

இதயசுத்தி இல்லையே!

தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் [illegible] வழங்க இதயசுத்தியுடன் சிங்களத் தலைவர்கள் விரும்புகிறார்கள். என்பதை எவரும் நம்பவில்லை.

சிங்களத் தலைவர்கள் மாகாணசபைகள் பற்றி சிங்களமக்கள் மத்தியில் கொடுத்துவரும் விளக்கங்களைப் பார்த்தால் இதுபுரிகிறது

ஒன்றும் இல்லாத வெறும் மாகாண சபையையே சிங்களவர் எதிர்க்கிறார்கள் என்பதில் இருந்து அந்த உண்மை புரிகிறது

எந்தவிதமான தீர்வு ஏற்பட்டாலும் அதை அமுல் நடத்த அரசாங்கத்தால் முடியும் என்ற நம்பிக்கையும் எவருக்கும் இல்லை.

தீர்வு ஏற்பட்டு விட்டது என்ற சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு போராட்டங்களை நிலைகுலைய

(7ஆம் பக்கம் பார்க்க)

சட்டத்தரணி அ.குமரகுரு அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளராகப் பணிபுரிந்தவர்.

தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை ஆகியவற்றின் முன்னோடி. தமிழர் பொருளாதார இயக்கத்தை ஸ்தாபித்தவர் இவர் இவரின் ஈடுபாடு காரணமாக 'குமரகுரு திட்டம்' என்றே இந்த இயக்கம் அழைக்கப்பட்டது.

லண்டனில் ஈழம் தமிழ்ச்சங்க பிரசாரங்களில் ஈடுபட்டார்.

இங்கு பிரசுரமாகும் கருத்துக்கள் திரு. குமரகுருவினுடையவை சஞ்சீவிக்கு அவை ஏற்புடைத்து என்பதல்ல.

பிரதம ஆசிரியர்.

கடல் கடந்த கடிதம்

கருத்துக் காட்சி பரவலாகுமா?

தம்பி,

பொருட்காட்சி எப்படி எனக் கேட்டெழுதியிருந்தாய்! மாணவர் முன்னணி அமைத்திருந்தது வெறும் பொருட்காட்சியல்ல, தம்பி, அது பெரும் கருத்துக் காட்சி என்று நேரில் பார்த்தவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

பலர் வகுப்புகளிலே - புதிய கல்வித் திட்டத்திலே - கற்பிப்பதற்கு உதவும் புதிய உத்தி என்ன தெரியுமா? செயல் மூலம் உணர்தல்! காதால் கேட்பவற்றை விடக் கண்ணாற் கண்டு விளக்கம் பெறும் கருத்துக்கள் மனதை விட்டகலா!

இளைஞர்கள் கருத்துக்கள் புதியவை-புரட்சிகரமானவை! தலைமுறை இடைவெளியைத் தாண்டியவை! பெரியவர்களுக்குத் தம் கருத்தை வலியுறுத்த அவர்கள் கையாளும் கற்பித்தல் உத்தியும் செயல் மூலம் உணர்தலே - பொருட்காட்சிகளே!

வரலாறு, விவசாயம், மருத்துவம், கைத்தொழில் போன்று பல்வேறு துறைகள் - ஐம்பத்தெட்டு அறைகள்! புதிய சிந்தனைகள் - புதிய கோணத்திலிருந்து பார்வைகள்! அவை அனைத்தும், தம்பி, கருத்துப் பெட்டகங்கள்!

"நீண்ட கியூவிலே நின்று - இவர்களால் எதைத்தான் சீராகச் செய்யமுடியும் என்று அலுத்துக் கொண்டே உள்ளே நுழைகிறோம்! பெருந்தொகையான மாணக்கரையும் பொதுமக்களையும் சமாளிப்பது சிரமம் தான்! அறையறையாகச் சென்று - அடுக்கடுக்காகக் கருத்துக்களைக் காட்சிகளாகக் கண்டு - உற்சாகமான, விரிவான விளக்கங்களைக் கேட்டு - இவர்களால் எதைத்தான் செய்யமுடியாது?' என்று வாயார வாழ்த்திக் கொண்டே வெளிவருகிறோம். புதுமனிதராக!" என்று அவர்களில் பலரும் அறிவித்திருக்கிறார்கள்.

சிந்தித்துச் செயலாற்றிய திட்டம் - சிரமங்கள் அதிகம் - சிரித்துக் கொண்டே சமாளிக்கப் பழகிவிட்டார்கள்! சிறு ஆலோசனை! தொகுதிகள் தோறும் - சனி, ஞாயிறுகளில் - வரலாறு கல்வி, விவசாயம் போன்ற சில பகுதிகளையாவது - காட்சிக்கு வைத்தாலென்ன? காட்சி எளிதாகும் - கருத்துப் பரவலாகும்!

—சிவா

(பகுதி ஒன்று)

விசித்திர நண்பரிடையே
விளைந்த விபரீதம்

முன்னொரு காலத்தில் ஒரு சிட்டுக்குருவியும் குட்டிச் சுண்டெலியும் நன்கு வெண்ணெய் தடவிய ரொட்டியும் ஒன்றாக ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தன.

சிட்டுக்குருவி வயல் வெளியிலிருந்து பறந்து வந்தது. சுண்டெலியார் ஒரு பூனையிடமிருந்து தப்பித்து வந்தார். ரொட்டி வாணலியிலிருந்து குதித்தோடி வந்தது.

இவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். சிட்டுக்குருவி வயல்களிலிருந்து தானியங்களையும் காட்டிலிருந்து காளான்களையும் கிராமத்துக் காய்கறித் தோட்டங்களிலிருந்து அவரைக் காய்களையும் கொண்டு வரும். சுண்டெலி விறகுகளைக் கொத்தி எடுத்து வரும். ரொட்டியோ சுவைமிக்க சூப்பையும் கூழையும் சமைத்து வைக்கும்.

வெளியே சென்று உணவுப் பொருள்களைச் சேகரிக்கும் சிட்டுக்குருவி களைத்துப்போய் வரும். ஊற்று நீரில் உடலைக் கழுவிய பின்னர் வாங்கொன்றில் அமர்ந்து சிறகுகளைச் சொண்டினால் கோதிவிட்டபடி ஓய்வெடுக்கும்.

சுண்டெலியோ அடுப்பில் விறகுகளை அடுக்கிவிட்டு சாப்பாட்டு மேசையைத் தயார் செய்யும். ரொட்டியோ கூழுக்கு உப்புச் சேர்த்து சுவை பார்க்கும்.

'ஆஹா! அற்புதமான சூப், அருமையாக இருக்கிறது' என்று சிட்டுக் குருவி கூறும்

'ஓ! நான் வெண்ணெய் தடவிய ரொட்டியாக்கும். ஒருமுறை பானைக்குள் குதித்து வெளியே வந்தேனென்றால் சூப்பின் சுவை மேலும் அதிகரிக்கும்' என்று ரொட்டி பதிலளிக்கும்.

'கூழ் கூட அருமையாகவும் சூடாகவும் இருக்கிறது' என்று சிட்டுக் குருவி கூறும்.

'நான் காட்டிற்குச் சென்று விறகுகளைக் கொண்டு வருகின்றேன். அவற்றைக் கொத்தி அடுப்பில் அடுக்குகிறேன். வாலால்விசிறி நெருப்பை எரியச் செய்கின்றேன். இதனால் தான் கூழ் சூடாக இருக்கின்றது' என்று சுண்டெலி கூறும்.

ரஷ்ய
நாட்டுக் கதை

ஒரு நாள் சிட்டுக்குருவி தனியே இருந்து சிந்திக்கத் தொடங்கியது. 'நான் பகல் முழுக்கப் பறந்து உணவு சேகரித்து வருகின்றேன். ஆனால் ரொட்டியோ காலை முதல் மாலை வரை அடுப்பங்கரையிலேயே இருந்து சமையலைச் செய்கின்றது. சுண்டெலியாரோ காலையில் விறகுகளைக் கொண்டு வந்து விட்டு மாலைவரை தூங்குகிறது. நானோ இறக்கைகள் ஓயும் வரை நான் முழுக்கப் பறக்க வேண்டியிருக்கிறது. இது நியாயமற்றது

கால்களை உதைத்து இறக்கைகளைப் படபடவென்று அடித்தது. 'நாங்கள் நாளையிலிருந்து எங்கள் வேலைகளை மாற்றிக் கொள்வோம்' என்று கீச்சுக் குரலில் கூறியது.

அடுத்த நாள் ரொட்டி காளான் எடுத்துவரக் காட்டிற்குச் சென்றது. சுண்டெலியார் சமையல் வேலைக்குத் தயாரானார். சிட்டுக்குருவி விறகு கொத்த ஆரம்பித்தது.

காட்டில் ரொட்டியைக் கண்ட கிழட்டு நரியொன்று, 'ரொட்டியாரே! எங்கே உருண்டு செல்கின்றீர்? ஏன் இந்த அவசரம்?' என்று கேட்டது.

'நான் காளான் சேகரிக்கச் செல்கிறேன்' என்று பதிலளித்தது ரொட்டி

நரியோ அதன் பதிலையிட்டு அக்கறை செலுத்தவில்லை பாய்ந்து சென்று வெண்ணெய் தடவிய ரொட்டியைக் கவ்வியது

'என்னை விட்டுவிடு. நான் காட்டிற்குச் சென்று காளான் சேகரிக்க வேண்டும். கிராமத்திற்குச் சென்று அவரைக்காய் கொண்டு வர வேண்டும்' என்று சத்தமிட்டது.

(மிகுதி அடுத்த வாரம்)

இறைவன் ஈந்தான் பாரு

உன்னைச் சுற்றி உலகில்
உள்ள செயல்கள் பாரு
என்ன என்ன இன்பம்
ஈந்தான் இறைவன் பாரு

வகை வகையாய் பூக்கும்
வாச மலரைப் பாரு
வண்ண நிறமும் தேனும்
அங்கு வைத்த தாரு?

நிலவை அள்ளி வானில்
அப்பி வைத்த தாரு
பலவும் எண்ணிப் பாரு
பரமன் அருள் புரியும்

மலையின் அருவி பாய
மாலை நேரக் காற்றும்
சோலை தன்னில் வீச
மஞ்சல் வெயில் காயும்

அன்னை அன்பைத் தூவ
தந்தை பொருள் தேட
என்ன கவலை உனக்கு
உண்டு உலகில் தம்பி?

சி. சதாசிவம்
சாவகச்சேரி.

தேசிகவிநாயகம்பிள்ளை

'பாட்டுக்கொரு புலவன்
பாரதியடா - அவன்
பாட்டைப்
பண்ணோடொருவன்
பாடினனடா
கேட்டுக் கிறுகிறுத்துப்
போனேனேயடா - அந்தக்
கிறுக்கில் உளறுமொழி
பொறுப்ப யடா

இவ்வாறு பாடி, பாரதியாரை உயர்த்திய உண்மைக் கவிஞர், மக்கள் கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை.

இவர் நாஞ்சில் நாட்டில் சிவதாணுப்பிள்ளை ஆதிலட்சுமி தம்பதிகளுக்கு மகவாக 1876 - 7 - 14 ஆம் நாள் தோன்றினார். இவரின் தந்தையாரும், பாட்டனாரும் புலவர்களாயிருந்தமையால், பிறப்புரிமை நெறியாள்கையினால் இவருக்குப் புலமை பீறிட்டுக் கொண்டு வந்து குற்றேவல் செய்தது.

இவர் பாடிக் குவித்தார். மலரும் மாலையும் ஒரு பெருந்தொகுதி, ஆசியஜோதி ஒரு பகுதி கீர்த்தனங்கள் உரைகள் இன்னும் பல.

பிள்ளை அவர்கள் சாந்தலிங்கத் தம்பிரான் என்பவரிடம் பெரிய நூல்களைக் கற்று பெருமைபெற்று நல்லாசிரியரானார். திருவாங்கூர் மகளிர் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையில் பேராசிரியராகப் பணிபுரிந்து முப்பத்தாறாண்டுச் சேவையில் மூப்படைந்து ஒய்வு பெற்றார்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் அவருக்குக் கவிமணிப்பட்டம் வழங்கினர். பின்னர் பெரிய செட்டிமார் பாராட்டும் பொன்னாடையும் பொன் முடிப்பும் வழங்கினர். அவர் ஆதீனங்களிற் பெற்ற சிறப்புக்களும் அருமையானவை. அவர் 1954-9-26 ஆம் நாள் வரை வாழ்ந்தார்.

நன்றி:மில்க்வைற் செய்தி



குடும்ப மகிழ்ச்சிக்கு நல்லவழி இதுதான்

கணவரின் வருமானத்தை அறிந்து கொண்டு, அதற்குள் அடங்குமாறு குடும்பத்தில் செலவுகளைச் சிக்கனப்படுத்தும் குடும்பத் தலைவியே மிகவும் போற்றத் தக்கவள்

பாலிய நண்பர்களாகிய கிருஷ்ண பரமாத்மாவும் குசேலரும் பல ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்தபோது, கிருஷ்ணர் குசேலரிடம் கேட்ட முதல் கேள்வியே, 'வரவு அறிந்து செலவு செய்யும் மனையாளோ உம்மனைவி?' என்பதுதான். இக்கருத்து குசேலோபாக்கியானத்தில்காணப்படுகிறது

அந்தக் காலத்திலேயே குசேலரைப் பார்த்துக் கிருஷ்ணர் இப்படியொரு கேள்வியைக் கேட்டிருக்கின்றார் என்றால் இந்தக் காலத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை கணவர் எவ்வளவு ஏழையாக இருந்தாலும், அவருடைய வரவு அறிந்து செலவு செய்யும் மனைவி அமைந்துவிட்டால் அதை விட மகிழ்ச்சியான குடும்பம் வேறில்லை.

திருமுருக
கிருபானந்தவாரியார்

கனவுகளும் பலன்களும்

பிறரைத் திட்டுவதாகக் கண்டால்: உங்கள் பண விஷயத்தில் முன்னேற்றம் காணப்படும்.
முதலையைப் பார்த்தால்: சிறு பிரயாணம் மேற்கொள்ள நேரிடும்
பணத்தை எண்ணுதல்: அந்தஸ்தில் சரிவு ஏற்படும்
பூனையைப் பார்த்தால்: நண்பர்கள் ஏமாற்றம்.
டாக்டரைப் பார்த்தால்: நோய் ஏற்படும்
உங்கள் படத்தைப் பார்த்தால்: பிறர் உங்களைத் திட்டுவார்கள்.
கலண்டரைப் பார்த்தால்: ஆச்சரியப்படத்தக்க நற்செய்தி தெரியும்
புத்தகம் படிப்பதாகக் கண்டால்: புது நண்பர் அறிமுகம் ஏற்படும்.
நடிகரைப் பார்த்தால்: மகிழ்ச்சி தரும் காரியம் ஏதாவது நடக்கலாம்.
பாம்பைக் கண்டால்: ஏதோ சிறிய விபத்து ஏற்படும்
கை, கால் முறிவதாகக் கண்டால்: அன்று பொதுவாக நல்ல நாளல்ல
திருடர்கள் விரட்டிப் பிடிப்பதாகக் கண்டால்: பணம் கிடைக்கும்.

தொகுப்பு:
செல்வராணி
யோகநாதன்

சீர்கெட்ட சீதனப் பிரச்சினை
பெண்கள்தான் பொறுப்பு என்ற வாதம் வெறும் அபத்தம்

ஆகஸ்ட் 16 ஆம் திகதி சஞ்சீவியில் 'நங்கை'யில் பிரசுரிக்கப்பட்ட "சீதனப் பிரச்சினைக்குப் பெண்களே பொறுப்பு" என்ற கட்டுரையை எம்மால்— பெண்கள் சமுதாயத்தால் ஒருபோதும் ஏற்க முடியாது.

அதை எழுதியவர் பெண்ணாக இருப்பது வேதனைக்குரியது பெண்ணுக்கே பெண்ணினத்தின் நிலையினைப் புரிந்து கொள்ளமுடியாதிருப்பது வருந்தவேண்டிய விடயம்தான்

சீதனப் பிரச்சினைக்குப் பெற்றோரே பொறுப்பென்றால் ஏற்கின்றோம். ஆனால் ஒரு பெண் அதுவும் திருமணம் செய்யப் போகும் பெண்ணென்றால் ஏற்றுக்கொள்ள முடியாது சகோதரி நினைப்பதுபோல பெண்கள் தமக்கு உயர் தொழிலுள்ளவர்தான் வேண்டும் உத்தியோகத்தர்தான் வேண்டும் என்றிருப்பதில்லை அப்படி என்றால் கீழானதொழில் செய்பவர்கள் அனைவரும் பிரமச்சாரியா? ஏன்

ஆண்களே சீதனம் கொடுத்ததும் தெரியாதோ?

இன்று உழவனுக்கு மனைவி இல்லையா? நகர்ப்புறம் சுத்தம் செய்வோருக்கு மனைவி இல்லையா? வழிவியாபாரிக்கு மனைவி இல்லையா? இவர்கள் எல்லாம் பிரமச்சாரியா? அல்லது இவர்களை மணந்தவர்கள் பெண்களில்லையா?

அன்றைய சமுதாயம் பற்றி சகோதரி கருத்து வெளியிட்டார். ஏன் சங்ககாலத்தில் ஆண்களே பெண்களை ஏமாற்றி வாழ்ந்துள்ளார்கள். வேதகாலத்தில் சமுதாயத்தில் ஆண்களே அதிகமாகவும் பெண்கள் குறைவாகவும் காணப்பட்டிருப்பதால் பெண்ணை எடுப்பதில் ஆண்கள் போட்டியிட்டு பெண்களுக்கு சீதனம் கொடுத்தே ஆண்கள் திருமணஞ் செய்துள்ளார்கள். அன்று பெண்கள் குறைவாக இருந்ததால் ஆண்கள் போட்டி இட்டார்கள் ஆனால் இன்று பெண்கள் கூடுதலாக இருப்பதால் எப்படியும் கிடைக்கும் என்று ஒரு நம்பிக்கையில் வரதட்சணை எனும் வலையை விரிக்க ஆண்கள் முற்பட்டார்கள். அதற்கு அவர்கள் பெற்றோரும் பக்கபலமாக இருக்கின்றனர்.

பெண்கள் தொழில் புரிவதால் அந்தஸ்தை விரும்புவதாகக் குறிப்பிட்டார் இதுவும் ஏற்க முடியாததொன்று ஏன் பட்டதாரி ஆசிரியைகளுக்கு பாமர மக்கள் தாலிகட்டியது வரலாற்றிலே இல்லையா? விவசாயிகள் டாக்டரை மணந்ததில்லையா? பெண்குலத்தின் பெற்றோரும் சீதனத்துக்கு ஒரு காரணம் என்று குறிப்பிட்டார். உண்மைதான். ஆனால் அது சகோதரி குறிப்பிட்ட காரணம் அல்ல. எந்த ஒரு பெற்றோரும் தமது பெண்ணை வாழவைக்கவே விரும்புவார்கள். பெண்ணைப் பெற்றோர் சமுதாயத்தில் பயப்பட வேண்டியுள்ளது. ஏழைக் குடும்பத்தில் பெண்கள் கன்னியாக இருக்க வேண்டியநிலை ஏற்படுகின்றது. அவளைப் பார்த்து வசைபாடும் சமுதாயம் அவளுக்கு வாழ்வு கொடுக்க முன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சத்தியதேவி கணபதிப்பிள்ளை

நோய் தீர்க்கும் மதுரத் தேன்

மார்பு வலிக்கு சிறந்த மருந்து தேன். ஒரு கரண்டி தேனை மாத்திரம் மார்பு வலியின் போது பருகி வந்தால் வலி வந்த இடம் தெரியாமல் ஓடிவிடும்.

* * *

மாதுளம்பழ வித்துக்களை எடுத்து இடித்து சாறுபிழிந்து தேன் கலந்து குடித்தால் நெஞ்சில் சளி அகன்றுவிடும் இது சிறு குழந்தைகளுக்கு நல்லது.

* * *

விளாம்பழத்தில் தேன் ஊற்றி சாப்பிட்டால் வயிற்றோட்டம் உடனே நின்றுவிடும்

* * *

வயிற்றில் அஜீரணம் ஏற்பட்டால் மிளகை கொஞ்சம் வறுத்து பின் அதில் ஒரு கோப்பை தண்ணீர் விட்டு வேக வைத்து வடித்தெடுத்த பின் அதனுடன் ஒரு கரண்டி தேன் கலந்து குடித்தால் அஜீரணம் குணமாகும்.

தொகுப்பு:
சிவமலர். செல்லத்துரை
புங்குடுதீவு

தமிழ் நடிகை சுவப்னா
இந்திப்படவுலகில் இடம்பிடிக்க
பகீரதப்பிரயத்தனம் செய்கிறார்

தமிழ் நடிகை சுவப்னா, இந்திப் படவுலகில் நிலையான கால் வைக்க படாத பாடுபடுகிறார்.

பம்பாய் திரை உலகம் பலபாகங்களிலும் உள்ள இளம் பெண்களின் கனவுப் பிரதேசமாக விளங்குவது தெரிந்ததே.

தமிழ்ப் படவுலகில் சாதனை புரியாவிட்டாலும், பெயரைப் பதித்துக் கொண்ட நடிகை சுவப்னா இந்தி பட உலகில் நிலையான இடம் பிடிக்கலாம் என்ற நினைப்பில் மூட்டை முடிச்சுக்களுடன் பம்பாய் சென்றார்

இந்தித் திரைப்படத் தயாரிப்பாளர் ஒவ்வொருவரையும் தேடிச் சென்று சந்தித்துப் பார்த்தார் சுவப்னா.

அதுமட்டுமல்ல,'ஹாகு மாட்' படத்தின் இயக்குனரைப் பழக்கம் பிடித்தார். அவர் தனது படத்தில் முக்கிய பாத்திரம் ஒன்றை சுவப்னாவுக்கு அளித்தார்.

படம் இறுதிக் கட்டத்துக்கு வந்து விட்ட நேரத்தில், தேவ் ஆனந்தின் 'சாச் கா போல் பாலா" படத்தில் நடிக்க சான்ஸ் கிடைத்துள்ளது.

இப்போது சுவப்னாவின் கவனம் தேவ் ஆனந்தின் மீது திரும்பியுள்ளதாம். இப்படி இந்திப்பட உலக வட்டாரங்கள் கூறுகின்றன

எப்படியாவது இந்தி உலகை பிடிப்பது தான் சுவப்னாவின் சொப்பனம்.

சொப்பனம் பலிக்குமா?

● தயாரிப்பு: பேரின்பம் ●

ரவீந்திரனின் சாதனை

"ரசிகன் ஒரு ரசிகை" "கண்மணியே பேசு" ஆகிய படங்களுக்கு இசையமைத்தவர் ரவீந்திரன் இவர் முன்னூறுக்கும் மேற்பட்ட மலையாளப் படங்களுக்கு "டப்பிங்" கொடுத்திருக்கிறார்.

கமலஹாசனுக்குக் கூட இவர் குரல் கொடுத்திருக்கிறார். சுமித்ராவின் முன்னாள் கணவர் ரவிக்குமாருக்கு அதிக படங்களில் குரல் கொடுத்துள்ளார்.

பெரும்பாலும் ஒரு படத்தின் 'டப்பிங்"கை இரண்டே மணித்தியாலங்களில் பேசி முடித்து விடுவாராம் ரவீந்திரன்.

★ திரை உலகில் ★

பானுப்ரியா படப்பிடிப்பிற்கு வரும்பொழுது தன் தங்கையையும் தவறாமல் அழைத்து வருகிறார். இது தங்கையை நடிகையாக்கும் முயற்சி என்று சிலர் பேசிக் கொள்கிறார்கள்.

பம்பாய்ப் படவுலகின் பரபரப்பான "கிசு கிசு" இது தான். ஸ்ரீகாந்த் நவஹாதாவை திருமணம் செய்து கொண்ட ஜெயப்பிரதா கர்ப்பமாக இருக்கிறார்.

சுருளிராஜனும், கவுண்டமணியும் செய்த காரியத்தை இபபோது செந்தில் செய்ய ஆரம்பித்து இருக்கிறார் ஒரு நாள் கால்ஷீட்டுக்கு பத்தாயிரம் ரூபா கேட்கிறார் செந்தில்.

ராதாவின் 'அவர்' யார்?

திருமண விஷயத்தில் அக்கா அம்பிகாவை தங்கை ராதா முந்திவிடுவார் போல் தெரிகிறது அதற்கு ஆதாரமாக இந்த நிகழ்ச்சியைச் சொல்லலாம்.

அந்த நிகழ்ச்சி இதுதான்.

ஒரு தெலுங்குப்பட படப்பிடிப்பு படத்தின் கதாநாயகன் என். டி. ஆரின் மகன். கதாநாயகி ராதா.

படத்திற்கான பாடல்காட்சி ஒன்று படமாக்கப் பட்டுக் கொண்டிருந்தது.

விசில் அடித்ததும் ராதாவும் என் டி. ஆரின் மகனும் நன்றாக ஆடி, ஒரே டேக்கில் சரியாகச் செய்து வந்தார்கள்.

ஷூட்டிங்கில் ராதாவிற்கு வியர்வை ஆறாக வழியவே 'மேக்கப் மேன்' அடிக்கடி 'டச்-அப்' செய்து கொண்டிருந்தார் ராதா அவரைப் பார்த்து, 'அடடா என்ன வெயில்' என்றதும் வெளியில் இருந்த நபர் ஒருவர் 'என்ன? எல்லாம் இரண்டு வருஷம் தானே? கவலைப் படாதே' என்றாராம்.

அவ்வாறு அவர் கூறியதும், ராதா எவ்வித [illegible] பதிலோ கூறாது புன்னகைத்தாராம்

அந்த நபர் யார் என்பதை அவரோ, ராதாவோ கூற மறுத்துவிட்டார்களாம்.

சாவித்திரியின் 'ரேட்' இப்பொழுது 80,000 ரூபா

ஜேம்ஸ் என்பவர் தனது சாவித்திரி என்ற குரங்கைப் படத்தில் நடிக்க வைப்பதற்கு எண்பதினாயிரம் ரூபா கேட்கிறார்.

அதேபோல் இவரது 'ப்ரௌனி' என்ற நாய் ரஜனியின் 'மாவீரன்" படத்தில் நடிக்க வாங்கிய தொகை ஒரு லட்சம் ரூபாவாம்.

இந்தளவு பெரிய தொகை வாங்குவது பற்றி ஜேம்ஸ் இப்படிக் கூறுகிறார்:

இன்றைய பெரிய டைரக்டர்கள் எல்லாம் என்னுடைய மிருகங்களால் உருவானவர்கள்.

காஜா, ராம நாராயணன், ராஜசேகர் போன்றவர்கள் எல்லாம் என்னுடைய மிருகங்களை வைத்துத்தான் மக்கள் மத்தியில் அறிமுகமானவர்கள்.

அது மட்டுமல்லாமல் அவர்களின் 'மார்க்கெட்' சரியும்போது கூட என்னுடைய மிருகங்களில் ஒன்றுதான் அவர்களைத் தூக்கிவிட்டுள்ளது.

இப்படியாக என்னால் பலர் வாழும்போது நான் ஏன் 'ரேட்' டைக் குறைக்க வேண்டும்' என்கிறார்.

வட இந்திய நடிகர் ஊட்டிக்குப் படையெடுப்பு

ஊட்டிக்கு வந்த மௌசு

இந்தியாவில் தயாராகும் பெரிய திரைப்படங்களில் எல்லாம் 'ஊட்டி' இடம்பெறப் போகின்றது.

வெளிப்புறக்காட்சிகளுக்கு இந்திப் படத் தயாரிப்பாளர்கள் காஷ்மீரைத்தான் நாடுவது வழக்கம்.

இந்த ஆண்டு அரசியல் பிரச்சினைகள் காரணமாக காஷ்மீருக்கு போவதைத் தவிர்த்து வருகின்றனர் தயாரிப்பாளர்கள்.

இதனால் தமிழ்நாட்டில் உள்ள உதகமண்டலத்துக்கு (ஊட்டி) பம்பாய்த் தயாரிப்பாளர்கள் படை எடுக்கிறார்கள்.

அமிதாப் பச்சன், தரம், மிதுன் சக்கரவர்த்தி உட்பட இந்தி நடிகர், நடிகைகள் 'ஊட்டி' யில் தான் முற்றுகையிட்டுள்ளார்கள்.

வீடியோவை ரசிக்கிறீர்களா?

உடல் நலத்தையும் கவனியுங்கள்

தொகுத்துத் தருபவர்: க. கனகராசா

Visual Display Unit என்பதன் சுருங்கிய வடிவமே வீடியு எனப்பட்டது. அதாவது வீடியோ எனப்பட்டது. ஒளி ஒலி ஆகியன பதிய பட்டு தேவையானபோது ஒளி திரையிலும் ஒலி பரப்பானிலும் கேட்க ஏற்படுத்தப்பட்ட சாதனமே வீடியோ ஆகும்.

ராடரின் உபயோகம் அன்றட பயன்பாட்டுக்கு வந்த பின்னர் வீடியோவில் செயலாக்கம் அதை ஒத்த வளர்ச்சியடைந்து வருகிறது. வீடியோவானது ரயில் நிலையம் தபால் தந்தி அலுவலகங்கள் பேருந்து நிலையங்கள் போன்ற எல்லா அலுவலகங்களிலும் கணிசமான அளவில் பெருகி வருகின்றது மக்கள் வீடியோ திரையின் முன் நின்று மணிக்கணக்கில் பணிபுரியும் நிலை ஏற்பட்டுள்ளதை நாம் அனைவரும் அறிவோம் ஒளித் திரையில் கொணரப்படும் ஒளிவடிவங்களைத் தொடர்ந்து கூர்ந்து நோக்குவதன் மூலம் மனித சமுதாயத்திற்கு சிற்சில தீமைகளும் ஏற்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை அதாவது ஒளி வடிவங்களைக் கூர்ந்து நோக்குவதன் மூலம் கதிர்வீச்சுக்களினால் இதனை உபயோகிப்போர் பாதிக்கப்படுகின்றனர் என்பது விஞ்ஞான அடிப்படையிலான உண்மையாகும்.

தொழில் நுணுக்கம் மிகுந்த இந்நாட்களில் தொழில் நுட்பக்கருவிகளால்ஏற்படும்நன்மைகள் பலவாகும் இருப்பினும் சிற்சில தவிர்க்கமுடியாத இன்னல்களுக்கும் மனித சமுதாயம் உட்படுத்தப்படுவது மறுக்க முடியாத ஒன்றாகும் இத்தொழில் நுட்பக்கருவிகள் அன்றட வாழ்க்கையில் கல்வியையும், சுகாதாரத்தையும் நல்கலாம் ஆனால் வீடியோ போன்ற மின்னணுக் கருவிகளினால் சிற்சில இடையூறுகளையும் நாம் கருத்திற்கொள்ளல் அவசியம். இவற்றின் விளைவுகள் மனிதனை நேரிடையாகவும் மறைமுகமாகவும் தாக்கி, சுகாதாரத்தைப் பாதிக்கின்றன என்பதை நாம் பின்வரும் கருத்துக்களினால் உணரலாம்.

வலிப்பு (epilepsy)

வீடியோவை இயக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோர் பெரும்பாலும் முதலில் எப்பிலப்சி எனப்படும் நோய்க்கு உட்படுகின்றனர். இந்த நோய்க்கான காரணங்கள் பலவாகக் கூறப்பட்டாலும் முதன்மையாகத் திகழ்வது, திரையில் உமிழும் ஒளிவடிவங்களை உற்று நோக்குவதன் மூலம் அவற்றின் கதிர்வீச்சுத் தன்மைகளுமே ஆகும். இவை கண்களுக்கு எரிச்சலையும், அயர்ச்சியையும் தந்து பார்வைக் குறையை ஏற்படுத்துகிறது ஆக இவ்விரண்டும் இணைந்து பணிபுரிபவரின் விழிப்படலத்தை வெகுவாகப் பாதித்துப் பார்வையை மங்கச்செய்து நரம்பு மண்டலத்தை பாதிக்கின்றன. இவ்வித பாதிப்பு நிலையே எப்பிலப்சி எனப்படும் வலிப்பு நோயின் ஆரம்ப கட்டமாகும்.

கதிர்வீச்சு

வீடியோவில் ஏற்படுத்தப்படும் ஒளிவடிவமானது தொலைக்காட்சிப் பெட்டியின் திரையில் தோன்றும் ஒளிவடிவத்தை ஒத்ததே. இவ்விரண்டிலும் அணுக்கற்றையானது அதிக அழுத்த மின்சாரத்தினால் முடுக்கப்பட்டு புளோரசண்ட் திரையில் ஒளிவடிவங்களாகத் தெரிகின்றன.

உண்மையில் எலெக்ட்ரான்களின் சக்தி முழுவதும் ஒளிச் சக்தியாக மாற்றப்பட வேண்டும் ஆனால் அப்படி நிகழ்வதில்லை. மாறாகச் சக்தியானது மாறுபட்ட அலை நீளங்களில் கதிர்வீசல்களாக மின் அணுக் கருவியிலிருந்து வெளிப்படுகின்றன.

இங்கிலாந்தில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரக் கணக்கின்படி அங்கு விற்பனை செய்யப்பட்ட எல்லா வீடியோக்களிலும் இவ்விதமான மின்காந்தக் கதிர்வீசல்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இங்கிலாந்தின் (National Radio logical Production Board) எனப்படும் சுகாதார நிலையம் தற்காப்புக்காக 1978 ஆம் ஆண்டின் முடிவிலும், 1980 ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் இப்புள்ளி விவரத்தைத் திரட்டியது இப்புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிலைகளில் உண்டாகும் நோய்கள் பற்றிய தொகுப்பானது இச்சுகாதார நிலையத்தினால் அறிக்கை வெளியிடப்பட்டது.

இங்கிலாந்து நாட்டின் கணக்கெடுப்பின்படி 500 பேருக்கு ஒருவர் வீதம் இந்நோயின் பாதிப்பிற்குள்ளாகின்றனர். இது பெரும்பாலும் 20 வயதுக்கு உட்பட்டவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

இன்பம் கூட்டும் என் குழந்தாய்!

கிழியின்றி வண்ணமின்றி
    கிளர்ந்தஉயி ரோவியம் நீ!
மொழியின்றி எண்ணமின்றி
    முகிழ்த்த தமிழ்க் காவியம் நீ!
பண்ணின்றி லயமின்றிப்
    பாடிவரும் மெல்லிசை நீ!
விண்ணின்றி வெளியின்றி
    விரியுமொழிப் பேரெழில் நீ!
நினைவின்றிச் செயலின்றி
    நேர்கண்ட மெய்க்கரு நீ!
வினையின்றித் துயிலின்றி
    விளைந்திடுநல் ஆக்கம் நீ!
மழையின்றி நிலமின்றி
    மலர்ந்தவனப் பொன்மலர் நீ!
இழையின்றிப் பாவின்றி
    இறைவன் நெய்த கலைத்துகில் நீ!
இடியின்றி முகிலின்றி
    இருள்கிழிக்கும் மின்கொடி நீ!
விடிவின்றித் திசையின்றி
    விண்தொங்கும் வெள்ளியும் நீ!
அச்சின்றி வார்ப்பின்றி
    ஆனவண்ணப் பதுமை நீ!
'இச்'சென்ற ஒலியில் இன்பம்
    எலாம்கூட்டும் என்குழந்தாய்!

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

வரும் வெற்றியை நோக்கி ..

இருண்ட மலைகளின் பின்னிருந்து
வைகறையின் குத்தீட்டிகள்
மெல்ல எழுகின்றன.
கறுப்பு நிழல்கள்
தெருச்சாக்கடைகளில் பதுங்குகின்றன
பனிப்புகையும் பொய்ப்பேய்களும்
சந்து பொந்துகளில் வெற்றுப் பாழில்
மெல்லப் புதைகின்றன.
நம் நீண்ட இரவு
திரும்பி வராப் பழைமைக்குள்
தூங்கப் போய்விட்டது.
வரும் ஒளியில்
தம் தலைக்குனிவு நீங்கி
ஓங்கி உயர்கின்றன
வயற் பூக்கள்

ஆபிரிக்க மூலம்: டென்னிஸ் புருட்டஸ்
தமிழில்: தர்ஸனு. நன்றி: பாலம்

தர்மன் விட்ட தவறை திருத்திய தம்பி வீமசேனன்!

பஞ்ச பாண்டவர்களில் மூத்தவரான தர்மராசாவிடம் ஒரு நாள் ஒரு பரம ஏழை வந்து தன் வறுமையைச் சொல்லி இரந்தான். தர்மராசா அந்த ஏழையைப்பார்த்து "நாளைக்கு வா அப்பா!" என்று சொல்லி அனுப்பினார்.

இதனைக் கேள்வியுற்ற தர்மராசாவின் தம்பியான வீமசேனன் உடனே முரசை எடுத்து அடிக்கத்தொடங்கினான். வெற்றி முரசின் ஒலி கேட்ட பலரும் அவனிடம் வந்து கூடி விட்டார்கள்.

"என்ன இது! வெற்றி முரசை முழங்குகிறாய்? போர் ஒன்றும் தொடங்கவில்லையே? அப்படி இருக்க நீ ஏன் வெற்றி முரசை கொட்டுகிறாய். என்ன விசேஷம்" என்று கேட்டார்கள்.

அவன் புன்னகை பூத்தபடியே சொன்னான்.

"எல்லா வெற்றியையும் விடப் பெரிய வெற்றி எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. காலத்தையே நாங்கள் வென்று விட்டோம். எங்கள் தமையனார் கால ஜயம் பெற்றுவிட்டார். அந்தப் பெரிய வெற்றிக்காகவே முரசை அறைகிறேன்" என்றார்

அதற்கு அவர்கள் 'நீர் சொல்வது விளங்கவில்லையே! கால ஜயம் எவ்வாறு பெற்றார்?' என வினவினார்கள்.

"தம்மிடம் வந்த பரம ஏழை ஒருவனை நாளைக்கு வரச்சொல்லியிருக்கிறார், நிச்சயமாக நாளைக்கு நாம் உயிரோடு இருப்போம் என்ற உறுதி அவருக்கு இருப்பதனால் தானே அவர் அவனை நாளைக்கு வரச் சொன்னார். இது பெரிய கால ஜயம் அல்லவா!" என்றான்.

இதனை அறிந்த தர்மராசா யாசகம் செய்ய வந்த ஏழையை உடனே அழைத்து வரச் சொல்லி அவனுக்கு வேண்டியதைக் கொடுத்து அனுப்பினார்.

✱ சி. பத்மநாதன்

தாம்பூலம் தரிக்கும் முறை

வெற்றிலை பாக்குப் போடும் பொழுது முதலில் வெற்றிலையின்றிப் பாக்கை மாத்திரம் போட்டுக் கொள்வது தவறு இதனால் இனசன விரோதம் ஏற்படுமாம். எனவே வெற்றிலையை முதலில் மென்று தின்ற தன் பின்பே பாக்கையும் வெற்றிலையையும் சேர்த்துத் தரிக்க வேண்டும் இதனால் இலக்ஷ்மி வாசம் செய்வாள்!

பண்டிதமணி: வரலாறும் காலமும்

ஆறுமுகநாவலர் அவர்களைக் கருவில் வளர்த்து ஈன்று புறந்தந்த செம்மனச்செல்வியாய அன்னை சிவகாமியைத்தந்த வேதவனத்தார் பசுக்கன்றைக் காத்துப் பாரததேசம் சென்ற ஞானி ஞானப்பிரகாசத் தம்பிரான் குடும்பத்தில் வந்தவர். இத்தகைய சைவம் கமழும் திருநெல்வேலியில் சிவமணங் கமழக் கமலச் சைவாசிரிய கலாசாலை உதயமானபோது, அந்த மங்கலகரமான வேளையில் உருவான இன்னொரு நிறுவனம் அன்புச்சோலை என்னும் சைவ அனாதை சிறுவர் இல்லம். சைவாசிரிய கலாசாலையும் சைவச் சிறுவர் இல்லமும் 1928 ஆம் ஆண்டு விஜயதசமி வேளையில் தோன்றிய இரட்டைப் பிள்ளைகள். இரண்டும் சைவம் பேணிய பெரு நிறுவனங்கள்.

சைவாசிரிய கலாசாலை நிரந்தரமான நிலத்தில் அமைதல் வேண்டும் என்று இராசரத்தினம் அவர்கள் சிந்தித்த போதே அதைச் செயற்படுத்துவதற்குத் திருநெல்வேலியைச் சேர்ந்த பெருங்குடிமக்கள் தோளோடு தோள் சேர்ந்து தொண்டு செய்ய முன்வந்தார்கள். செம்பாடு எனப்பெயர் பெற்ற செம்மண் பூமியிலே பனையும் வேம்பும் பரவலாக வளர்ந்தோங்கிப் பசுமையாக இருந்த பெருநிலப் பரப்புக்குச் சொந்தக்காரியாக இருந்த மூதாட்டி பொன்னுப்பிள்ளை வல்லிபுரம் என்னும் சீமாட்டியாவர் அவர் செம்மனச் செல்வியாயிருந்த பெருந்தன்மை காரணமாக அவரின் பெண்பிள்ளைகளும் நல்லறு நங்கையர்களாய் நல்ல தொண்டு செய்யும் பெண்டுகளாயிருந்தனர்.

அன்புச்சோலையில் பாதுகாப்புப் பெற்ற சிறுர்

பொன்னண்ணன் என்று எல்லோரும் பணிவன்போடு வழங்கி வந்த பெரிய சண்டியன் வல்லிபுரம் பொன்னம்பலம் என்னும் பரோபகாரி, மூதாட்டியின் மருகர். இவரைட்போன்ற இன்னுஞ் சிலரைப் பக்குவப்படுத்தி வந்த பெரியவர் காசிப்பிள்ளை என்னும் பெரியவர். அவர் யோக சுவாமிகளின் சீடர். காசிப்பிள்ளை அவர்கள் பக்குவப்படுத்திய செல்வர்கள் சிலர் சைவாசிரிய கலாசாலைக்கு வேண்டிய நிலத்தை இலவசமாக உபகரிப்பதற்கு முன்வந்தனர். சிலர் மிகக் குறைந்த விலையில் கொடுப்பதற்கு முன்வந்தார்கள்

பூமிதானம் செய்வதன் மகத்துவத்தைப் போதித்துச் செல்வர்களின் சித்தத்தைப் பழுக்கவைத்த பெரியார், தோட்ட ஐயா எனப் பெயர் பெற்ற சிங்கப்பூர் வைத்தியர் சபாபதிப்பிள்ளை அவர்களாவர். சபாபதியார் செய்த சைவப்பணி பெரிது அவர்கைமாறிய காணிகளுக்கான நட்ட ஈட்டைக் கொடுத்ததோடு, உறுதிகள் எழுதிய செலவையும் கொடுத்து உழவாரப் பணியும் செய்யத் தொடங்கினர். இங்ஙனமாகச் சைவாசிரிய கலாசாலைச் சூழலுக்கு ஏறக்குறைய நாற்பது பரப்பு நிலம் மிகவும் வசதியாகக் கிடைத்தது.

சபாபதிப்பிள்ளை அவர்கள் சைவ நாயன்மார் அடிச்சுவட்டிற் சென்று பணிபுரிந்தவர். அவர் வீடுவீடாகச் சென்று பிள்ளைகளுக்கு உதவி செய்ததோடு, அவர்களுக்கு உண்டாகும் காயம், புண் முதலியனவுக்கு மருந்து கட்டியும் பணிபுரிந்தவர். ஏழைப் பிள்ளைகள் சிலரைச் சுவிகாரஞ் செய்து, தமது மனையில் வளர்த்து வந்தவர். இங்ஙனம் தாம் வளர்த்த அன்புக் குழந்தைகளை அவர் அன்றைய விஜயதசமி நாளில் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்துக்குத் தத்தம் பண்ணிக் கொடுத்தவர். அன்றுமுதல் இராசரத்தினம் அவர்கள் அந்தப் பிள்ளைகளுக்கு அப்பு ஆனார் அவர் 1970ஆம் ஆண்டில் பூதவுடலை நீக்கும்வரை நாள்தோறும் மூன்றுவேளை சிறுவர் இல்லத்தைப் பார்வையிட்டு அன்புத் தந்தையாயே இருந்தார்.

இங்ஙனமாகச் சைவாசிரியர்களாகப் பயிற்சி பெறுவதற்கு வந்திருந்தவர்களோடு, புகுமுகத் தேர்வுக்கு ஆயத்தஞ் செய்வதற்கு வந்துறைந்தவர்களோடு, அந்தச் சைவாசாரச் சூழலில் தங்கள் வாழ்வை மலர்த்துவதற்கு வந்திருந்த அரும்பு போது மொட்டு என்னும் பருவத்தினராய் சைவச் சிறுவர்களும் அங்கே ஓடி ஆடித் திரிந்தார்கள் சிறுவர்கள் இளமையிலேயே திருநாவுக்கரசநாயனாரின் உழவாரத் திருப்பணியினைப் பழகி வந்தார்கள் என்றால் அந்தப் பெருமை ஆசிரியர் சோ தம்பிப்பிள்ளை அவர்களையே சாரும். அவர் பிள்ளைகளைத் தாய்மைக் குணத்தோடு மேற்பார்வை செய்ததோடு தன்னலமற்ற பணிகள் செய்யவும் விளையாட்டோடு விளையாட்டாகப் பழக்கிவிட்டார். ஆசிரியர் தம்பிப்பிள்ளை திருநாவுக்கரசநாயனாரின் தேவாரத்திருப்பதிகங்களைத் தாளம்போட்டுப் பாடப் பாடப் பிள்ளைகள் கேட்டுக் கேட்டு மனப்பாடமாக்கிக் கொண்டே ஓடி ஆடிக் கல்லுகள் பொறுக்குவதும், செடிகள் பூண்டுகள் பிடுங்குவதுமாகப் பணிபுரிந்தார்கள்.

இந்த மகிழ்ச்சிகரமான பணியோடு பணியாக அவர்கள் செய்த மகத்தான பளுவான பணி தூரத்திலே பறிக்கப்பட்ட ஓலைகளைத் தனி ஒவ்வொன்றாகத் தூக்கி வந்து அடுக்கிக் குவித்து வைத்தமையுமாகும் இவ்வாறே இவர்கள் அங்கே எழும்பிய கட்டட வேலைக்கு வேண்டிய சிறு பொருள்களையும் சுறுசுறுப்போடு சேர்த்துக் கொடுத்தார்கள்.

இங்ஙனம் இளமையிலேயே சிரமதானப் பணி பழகிய இவர்களைத் தம்பிப்பிள்ளை அவர்களுக்குப்பின் மேற்பார்வை செய்தவர்கள் முருகேசு என்னும் முன்னைக்குமரன், வினாசித்தம்பி, பண்டிதர் துரைசிங்கம், முருகுப்பிள்ளை, சரவணமூர்த்தி, செல்லத்துரை என்னும் ஆறுமுகம் முதலானோரும் பிறருமாவர்

முன்னைத்திவைச் சேர்ந்த முருகேசு உபாத்தியாயர் நல்ல மேய்ப்பன். அவர் காலத்தில் எட்டுப்பிள்ளைகளோடு நிலவிய சிறுவர் இல்லம் ஓராண்டுக் காலத்தில் அறுபத்துமூவருக்கு இடங்கொடுத்தது

சிறுவர் இல்லம் சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்துவந்த காலத்தில் பத்தாண்டுகளின் பின் அங்கே சிறுமியருக்கும் இடம் கிடைத்தது. சிறுமியர் அங்கே வந்து சேர்ந்து வாழ்வதற்கு வழியமைத்தவர் சங்கப் பாடசாலைகளை நன்குபரிபாலித்த திரு ஏ. செல்லப்பா என்பவராவர். சிறுமியர்களுக்கு அந்தக் காலத்தில் மெய்யாய் மெய்யாய்த் தாயாய் வந்து பாதுகாப்பளித்தவர் அன்னை இருவாட்டி இ இராசம்மையார் என்பவராவர். இவர் நுணுவில் சைவவித்தியாசாலையில் ஆசிரியையாயிருந்து ஓய்வுபெற்றவர்.

இவ்வாறாக வளர்ந்து வந்த அன்புச் சோலை, சைவச்சிறுவர் சிறுமியர் புறமதத்து மேய்ப்பர்களால் குறிசுடப்படாது பாதுகாப்புப் பெற்றனர். இவர்களின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் வரையாது வழங்கிவந்த வள்ளல்கள் பலருள் டாக்டர் பி எஸ் என்னும் சுப்பிரமணியம் அவர்களையும், ஈழகேசரி பத்திராதிபர் பொன்னையா அவர்களையும் நினைவிற் கொள்ளுதல் சாலும்.

★ க. சி. குலரத்தினம் ★

(வளரும்)

தமிழகநாவல் இலக்கியம்:

அதன் வளர்ச்சியும் தேக்கமும்

பகுதி 1

தமிழில் உரைநடை என்பது இன்று ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றிருக்கிறது புனைகதைகள், பத்திரிகைச் செய்திகள், விஞ்ஞானக் கட்டுரைகள், விளம்பரங்கள் எல்லாம் உரைநடையைக் கொண்டே நடைபெறுகின்ற காலம் இது. புதுக்கவிதைகள் என்று சொல்லப்படுபவை கூட ஒரு வகையில் ஒடித்துப் போடப்பட்ட உரை நடை வாக்கியங்கள் தாம்

ஆனால் முதன் முதலில் தமிழில் உரைநடை எழுதப்பட்டபோது, வெகு காலத்திற்கு முன்னால் அல்ல, நூறு ஆண்டுகளுக்கு முன்னால், அது இலக்கியத்தின் வீழ்ச்சியாக, மொழியின் தேக்க நிலையாகவே கருதப்பட்டது என்பதை இப்போது நினைத்துப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. தமிழின் முதல் நாவலை வேதநாயகம்பிள்ளை 1879 ஆம் ஆண்டில் எழுதினார். இதற்காக முன்னுரை வேண்டி வேதநாயகம் பிள்ளை, அப்போது தமிழறிஞர்களில் முதலிடத்தை வகித்து வந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளையை அணுகியதாகவும், பிள்ளையவர்கள் உரைநடையில் காவியம் செய்வது சிறப்பான காரியம் இல்லை என்ற காரணத்தால் மறுத்து விட்டதாகவும் என் நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன் தமிழறிஞர்கள் யாரிடமிருந்தும் சரியான முன்னுரை கிடைக்காத நிலைமையில் வேதநாயகம் பிள்ளையே முன்னுரை எழுதிப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். முன்னுரை ஆங்கிலத்தில் இருக்கிறது. படித்தவர்களிடத்தும் புத்தகத்திற்கு ஒரு கௌரவம் கிடைக்கவேண்டும் என்பதற்காக அதை ஆங்கிலத்தில் அவர் எழுதியிருக்கக்கூடும்.

பிரதாப முதலியார் சரித்திரம் வெளியான போது எத்தகைய வரவேற்பு இருந்தது எத்தகைய விமர்சனங்கள் இருந்தன என்று தெரியவில்லை நமக்கு இன்று பார்க்கக் கிடைப்பதெல்லாம், புத்தகம் வெளியாகி கிட்டத்தட்ட மூன்று வருஷங்கள் கழிந்து 'இந்து' வில் வெளியாகியிருக்கிற விமர்சனமும், ஏழு வருஷங்கள் கழிந்து கல்லூரி மகசின் ஒன்றில் வெளியாகியிருப்பதும் தான். ஏறத்தாழ இந்தச் சமயத்தில் வெளியான அருணசலக் கவியின் இராமநாத கீர்த்தனைகள் என்ற செய்யுள் நூல் பரவலாக வரவேற்கப்பட்டும் விவாதிக்கப்பட்டும் இருந்திருக்கிறது. தமிழின் இரண்டாவது நாவல் வேதநாயகம் பிள்ளை எழுதியதற்கும் பின்னால் 14 வருஷம் கழித்து வெளியாகியது

சிவசங்கரி

(6ஆம் பக்கம் பார்க்க)

அகோர வெயிலை

சமாளிக்க சில வழிகள்

ஸ்ஸ்ஸ்! அப்பாடா!! என்னவெயில் என்கின்றீர்களா?

இதன் கொடுமையின் தாக்கத்தில் இருந்து விடுபட இதோ சில இலகுவான வழிமுறைகள்!

வெயில் காலத்தில் பனியனை எப்போதும் போட்டுக் கொண்டிருக்க வேண்டும். பனியன் வியர்வையை இழுத்துக் கொள்கிறது. இதனால் வியர்வையோடு வெளிப்படும் உப்புக்கள் சருமத்தில் படிந்து உறுத்துவது தவிர்க்கப்படுகிறது.

றப்பர் அல்லது பிளாஸ்ரிக் காலணிகளை அணியக்கூடாது. இவற்றை அணிந்தால் காலில் சூடு அதிகமாகத் தெரியும். சப்பாத்துக்களை கண்டிப்பாக ஒதுக்கவேண்டும் இலேசான சிலிப்பர்கள் தான் கோடைக்கு உகந்தவை.

குளிர்ந்த நீரிலோ, வெந்நீரிலோ குளிக்கக்கூடாது. [illegible] வெப்பநிலைக்கு சமனை [illegible]லேயே குளிக்கவேண்டும் இரவில் படுக்கப்போகுமுன் குளிப்பது நல்லது. இதனால் பகலில் உண்டான வெப்பத்தின் எதிரொலியை முறியடிக்கலாம்

தண்ணீர், பழச்சாறு முதலிய பானங்களை நிறையப் பருகவேண்டும். எத்தனைக்கு எத்தனை வியர்க்கிறதோ அத்தனைக்கு அத்தனை அதிகமாகப் பருகவேண்டும். வெப்பம் கூடிய நாட்களில் உடலிலிருந்து நான்கு கலன் நீர் வெளியேறிவிடும் இதனை ஈடுகட்டும் வகையில் தண்ணீர் பருகவேண்டும். ஆனால் வெயிலில் அலைந்துவிட்டு வந்து உடனே குளிரூட்டப்பட்ட நீரைக் (ஐஸ்) குடிக்கக்கூடாது. இந்த வெப்பமாற்றத்தைத் தாங்கிக்கொள்ள இயலாதபடி தொண்டை பாதிக்கப்பட்டு நோய்களுக்கு [illegible]. வெயில் கால

- ரட்ணா -

(6ஆம் பக்கம் பார்க்க)

காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

ரோமக் குடியரசு சாம்ராஜ்யமாக மாறுகிறது

(பகுதி III)

ரோம ராஜ்யம் குடியரசு நிலையிலிருந்து சாம்ராஜ்ய நிலைக்கு மாறிக்கொண்டிருந்த காலத்தில் எகிப்தில் ஒரு மாது வாழ்ந்து வந்தாள். அவள் பெயர் கிளியோபாத்திரை என்பது.

தன்னுடைய அழகினால் பிற்காலத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்று விளங்கும் நல்லூழ் அவளுக்கு இருந்தது அவளை மாசு மறுவற்றவள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் தங்களுடைய அழகினால் சரித்திரத்தின் போக்கையே மாற்றிவிட்டதாகக் கருதப்படும் ஒருசில பெண்மணிகளுள் அவளும் ஒருத்தி என்று எண்ணப்படுகிறாள். ஜூலியஸ் சீஸர் எகிப்துக்குச் சென்றபோது அவள் சிறு பெண்ணாக இருந்தாள். பிற்காலத்தில் அவளும் மார்க்கு அந்தோனியும் சிறந்த நண்பர்களாக விளங்கினார்கள் ஆனால் அவள் அவனுக்கு யாதொரு நன்மையும் செய்யவில்லை

ஒரு பெரிய கடற்போர் நடைபெறக் கொண்டிருந்தபோது, அவள் அவனை விட்டுவிட்டுத் தன் கப்பல்களுடன் போய்விட்டாள். இதை நம்பிக்கைத் துரோகம் என்றே சொல்லவேண்டும்

பஸ்கல் எனும் புகழ் பெற்ற பிரெஞ்சு ஆசிரியர் ஒருவர் "கிளியோபாத்திரையின் மூக்கும் சாயலும் உலகத்தின் போக்கையே மாற்றிவிட்டன" என்று கூறியிருக்கிறார் இது மிகைபடச் சொன்னதாய் இருக்கலாம் கிளியோபாத்திரையின் மூக்கு காரணமாக உலகத்தில் பெரிய மாறுதல் ஒன்றும் ஏற்பட்டிருக்க முடியாது

ஆனால் சீஸர் எகிப்துக்குச் சென்று திரும்பிய பின்னர் தன்னை அரசனாகவும், சக்கரவர்த்தியாகவும் தெய்வாம்சம் பொருந்தியவனாகவும் மதிக்க ஆரம்பித்தான் என்று சொல்லுவது

(6ஆம் பக்கம் பார்க்க)

நேருவிடமிருந்து இந்திராவுக்கு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தாவரங்களில் காறை அழுகல் நோய்

நிரஞ்ஜனி இராமநாதன்
(தாவரவியற்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

பகுதி I

அண்மைக் காலங்களில் யாழ் குடாநாட்டிலுள்ள உற்பத்தியாளரைப் பாதிக்கும் வகையில் பல தாவர நோய்களைத் தோற்றியுள்ள ஒட்டுண்ணி பங்கசுக்களில் ஒன்று ஸ்கெலெரொற்றியம் றொல்ப்சை Sclerotium rolfsii sacc (Corticium rolfsii Curgi) ஆகும். இது பல பயிர்வகைகளில் காறை அழுகல் (collar rot) சாப் பற்றழுகல் (Damping off), குமிழ் அழுகல் (bulb rot), மற்றும் கிழங்கு, வேர்த்தண்டு போன்றவை அழுகுதல் ஆகிய நோய்களைக் கொண்டு வருவது அறியப்பட்டுள்ள போதிலும் சிறிது காலமாக மிளகாய் உற்பத்தியிலும் பம்பாய் வெங்காய பயிர்ச் செய்கையிலும் இதனால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். மிளகாயில் காறை அழுகலைத் தோற்றுவித்த இப்பங்கசு பம்பாய் வெங்காய விதை முளைத்தலை பாதித்ததுடன் நாற்று மேடையிலேயே குமிழ் அழுகலை (bulb rot) ஏற்படுத்தியது மண்ணிலிருந்து தொற்றலை ஆரம்பிக்கும் இப்பங்கசு தாவரங்களில் நோயை ஏற்படுத்துகின்றது

சாதாரணமாக மண்ணின் மேற்பரப்பிற்கு சற்று மேலேயுள்ள தாவரப்பகுதிகளில் இது முதலில் நோயறிகுறிகளைத் தோற்ற ஆரம்பிக்கின்றது. தண்டின் அடிப்பாகத்தில் ஏற்படுத்தப்படும் நீர்ப்பற்றுள்ள மண்ணிற, அழுகலிற்குரிய நோய்பரப்புகளே இந்த முதல் அறிகுறிகளாகும். இதனைத் தொடர்ந்து இப்பங்கசின் தூய வெண்ணிற, பூஞ்சண இழைகள் தண்டில் மேல்நோக்கி விசிறி வடிவில் படர ஆரம்பிக்கின்றன. தண்டின் கீழே உள்ள பகுதியிலும் இவை ஒரே சமயத்தில் பரவி வேரை அழுகச் செய்வதுடன் தாவரத்தின் கடத்தும் இழையங்களைத் தாக்கி அவற்றின் செயலிழக்கச் செய்வதனால் தாவரங்களின் நீருறிஞ்சலை முற்றாகத்தடை செய்கின்றன. இதனைத் தொடர்ந்து தொற்றலுக்குட்பட்ட தாவரங்கள் மண்ணில் நீர் போதியளவு இருப்பினும் வாடலைக் காட்டி பின்னர் படிப்படியாக இறக்கின்றன. வாடல் (Wilt) அறிகுறிகளைக் காட்டும் பயிர்களின் தண்டையொட்டிய மண்ணிற் புதைந்திருக்கும் பகுதிகளில் பங்கசின் பூஞ்சண வலையுடன் அவற்றின் பதிய வித்திகள் இலகுவில் அவதானிக்கப்படலாம். வன்கோதுகள் (Sclerotia) எனப்படும் கடுகை ஒத்த நிறம், பருமன்கொண்ட இவ்வித்திகள் அதிக எண்ணிக்கையில் தோற்றப்படுவதுடன் பங்கசின் பரம்பலிற்கு காரணமாகின்றன. பூஞ்சண இழைகளில் ஆங்காங்கே நுண்ணிய, தூய வெள்ளை முடிச்சுகளாகத் தோற்றப்படும் இவ்வித்திகள் படிப்படியாக பருமனில் அதிகரித்து நிறம்மாறி வெளிப்புறம் தடித்த கோதுகொண்ட கபில நிற மணிகளாக உருமாறும். கடும் வெப்பம், குளிர், இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றிற்கு எதிர்ப்புச் சக்தி கொண்ட இவ்வித்திகள் தகாத காலத்தை மண்ணிலேயே கழித்து பின் காலநிலை சீரானதும் முளைத்து பூஞ்சண இழைகளைத் தோற்றி புதிய தாவரங்களைத் தாக்கும்.

மண்ணில் எளிய அழுகல் வளரி போசணை முறையைக் காட்டும் இப்பங்கசு ஓரளவு அமிலத்தன்மை கொண்ட, சேதன உறுப்பு பதார்த்தங்களை அதிகளவில் கொண்ட மண் வகைகளில் மிக விரைவாக பரம்பலடையும். இவற்றின் பரம்பலை ஓரளவு வெப்பமும், ஈரலிப்புத் தன்மையும் ஊக்குவிக்கின்றன. இப்பங்கசானது அத்துடன் தனது தொழிற்பாடுகளின் மூலம் மண்ணினது அமிலத்தன்மையை அதிகரிக்கின்றது மண்ணின் மேற்பரப்பில் ஏறத்தாழ பத்து அங்குலங்கள் ஆழம்வரை உயிர்தப்பி வாழக்கூடிய இப்பங்கசு மழைகாலத்தின் பின்னர் மண் அணைத்தலின் போது (Earthing up) வெளிக்கொண்டுவரப்படுவதனால் தாவரத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறது

(வளரும்)

தமிழ் பகுதிகளின் கனிப்பொருள்கள்

கே. கணபதிப்பிள்ளை

கனிப்பொருள்கள் விவசாயம்தொழில்துறை போன்றவைகளுக்கு அத்தியாவசியம் ஆகின்றன. மேலும் கனிப்பொருள்கள் கலை, கலாசாரம் போன்றவற்றுடன் வளர்ந்திருக்கின்றது. கனிப்பொருள்களின் தேவைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காணப்படும் கனிவளங்களை சக்திவளங்கள், இரும்பும், இரும்பு சேர்ந்த கனிவளங்கள், இரும்பு தவிர்ந்த ஏனைய கனிவளங்கள், லோகம் அல்லாத கனிப்பொருள்கள், என நாலு வகைகளாகப் பிரிக்கலாம்

சக்தி வளங்களில் விறகு, விவசாயக் கழிவுப் பொருள்கள் ஆகியவை அடங்குகின்றன. இதைத்தவிர கடலில் காணப்படும் வெப்ப அழுத்த வேறுபாடுகளை உபயோகித்துச் சக்தியைப்பெற வாய்ப்புண்டு.

இரும்பு சார்ந்த கனி வளம், சேருவிலவில் காணப்படுகின்றது. இவை செறிவு குறைந்து இருப்பதனால் இவற்றை தொழிற் துறையில் பயன்படுத்த வாய்ப்பு குறைவாக இருக்கின்றது. இதைத் தவிர இரும்பு சேரா கனிப்பொருள்களாகிய இல்மனைட், றூட்டில், சேர்லோன் போன்றவையும் காணப்படுகின்றன.

> ஆய்வு நிறுவனம் நடத்திய "எமது பிரதேச தொழிற்துறை ஆற்றல்களும் எதிர்காலமும்" என்ற கருத்தரங்கில் ஆற்றப்பட்ட உரையின் தொகுப்பு இது.

உலோகமல்லாத கனி வளங்களாகிய சிமெந்து தயாரிப்பில் பாவிக்கப்படும் முருங்கன் களிமண்ணும் செங்கல், ஓடு, மட்பாண்டங்கள் ஆகியன தயாரிப்பதற்கு தகுந்த களிமண் ஒட்டுசுட்டான் பகுதிகளிலும், கண்ணாடித் தொழிற் துறைக்கு ஓரளவு தகுதியான கடல்மண் (சிலிக்கன்) வல்லிபுரம், அம்மன், திருகோணமலை ஆகிய பகுதிகளிலும் சுண்ணாம்புக் கற்பாறைகள் கட்டிடத் தொழில், சிமெந்துத் தயாரிப்பு ஆகியவற்றிற்கு ஏற்றவையாக யாழ்குடா நாட்டிலும் பரவலாகக் காணப்படுகின்றன இவற்றைத் தவிர உப்பு ஆனையிறவு, பாலாவி ஆகிய இடங்களில் காணப்படுகின்றது

மேற்கூறிய மூலவளங்கள் தவிர விவசாய உற்பத்தியின் விளை பொருள்களும், கழிவுப் பொருள்களும் வேறுவகைத் தொழிற்துறையில் மூல வளங்களாக அமைகின்றன. எம் பிரதேசங்களில் விவசாய உற்பத்தியில் நெல், நிலக்கடலை, எள்ளு, ஆமணக்கு போன்றவைகளிலிருந்து எண்ணெய், பிண்ணாக்கு ஆகியவை தயாரிக்கலாம் ஆமணக்கு எண்ணெய் இயந்திரங்களுக்கு பாவிப்பதற்கு தரம் வாய்ந்ததாகும் உமி, நிலக்கடலை, கோது ஆகியவற்றை தடித்த மட்டைகள் (சிப்போட்) தயாரிப்பதற்கு உபயோகிக்கலாம். உமிச் சீமெந்து போன்ற பொருள்கள் தயாரிப்பதற்கும் உபயோகிக்கலாம். பருத்தி

(7ஆம் பக்கம் பார்க்க)

எரிபொருள்

தட்டுப்பாடு, விலை ஏற்றம்; பாவனையாளர்கள் படும் பாடு

இன்று வடபகுதியிலுள்ள மக்களுக்கு மலிவாகக் கிடைப்பது மரணம் ஒன்றே

மரணத்தைத் தவிர மற்றெல்லாவற்றிற்கும் கியூவில் நின்றாலே கிடைக்கும்.

அந்த கியூக்கள் எல்லாவற்றிலும் பெரிய கியூ எரிபொருள் கியூ

அரச தமிழர்களை கால் நடைகளாக மதிப்பதாலோ என்னவோ அன்று காரில் போனவர்களும் இன்று கால் நடைகளாக போகிறார்கள் எரிபொருள் தட்டுப்பாட்டால்!

மக்களின் மனக்கோலங்கள்

நெருப்பைக் கண்டதும் பற்றி எரியும் எரிபொருளின் விலையைக் கேட்டதும் வயிறு பற்றி எரியுது

இவ்வாறு மக்களின் எரிச்சலுக்கும் கரிச்சலுக்கும் உள்ளாகும் எரிபொருள் பற்றி மக்களின் மனக்கோலங்களை அறிய முற்பட்டது சஞ்சீவி.

கீரை கூட விலை கூடி விட்டது. காரணம் கேட்டால் எரிபொருள் தட்டுப்பாடென்கிறார் கீரைக்காரி.

அவசரம் பத்துக்கு ஆஸ்பத்திரிக்கு காரிலை போக இயலாது.

மந்திகைக்கு போவதற்கு மாறகமவுக்கு போற காசு கேட்கிறார்கள் கார்க்காரர்கள் கட்டைக்கு 30 ரூபா கேட்கிறாங்கள் கட்டையிலை போவார்.

பெற்றோல் செட்டிலை 17/50 சதத்துக்கு பெற்றோல் வாங்கிவிட்டு 30 ரூபாவுக்கு கள்ளவிலையில் வாங்கியதாக பொய் சொல்லி, கொள்ளை லாபம் அடிக்கிறார்கள் டாக்சிக்காரர்கள்.

இவர்களை எல்லாம் எரிபொருளை ஊற்றியே எரிக்கவேணும்.

—இவ்வாறு எரிந்து விழுந்து கார்க்காரர்மேல் போர்க் கோலம் பூண்டவர்; முன்னர் காரில் சென்று இன்று கால் நடையாகச் செல்லும் கச்சேரி ஊழியர் ஒருவர்.

டாக்சி சாரதி

அவர் பேச்சிலே காரமிருந்தாலும் சாரமும் இருந்ததால் ஒரு டாக்சி சாரதியிடம் இது பற்றி வினவினேன்.

"எரிபொருள் விற்பனை முகவர் சங்கம் ஓரளவு கட்டுப்பாட்டு விலையில் பெற்றோல் கிடைக்கச் செய்கிறது.

இருந்தும்; இதனால் டாக்சிக்காரர்களுக்கு எந்தவித பலனுமில்லை. ஒரு நாள் முழுக்க கியூவில் நின்டு பெற்றோல் வாங்கினால் டாக்சி வாடகைக்கு ஓட நேரம் கிடைக்காது.

எனவே நாம் கள்ள விலையில் தான் பெற்றோல் வாங்கவேண்டியுள்ளது. இதனால் பாதிக்கப்படுவது பொதுமக்களே.

முன்னர் மைலுக்கு 10 ரூபா வாடகை வாங்கினோம் இன்று 30 ரூபா வாங்குகிறோம் இது அநியாயமான வாடகை என்றாலும் நாமும் எமது குடும்பத்தை நடத்த வேண்டியுள்ளதே?

கள்ள விலை

சில கிழமைகளில் எந்த வித வருமானமும் இருப்பதில்லை. இதனால் பல டாக்சி சாரதிகள் தமது தொழிலையே கைவிட்டு விட்டார்கள் வாகனங்களை கட்டையில் ஏற்றி விட்டு'!

புத்திசாலியான ஒருவர் கள்ளவிலையில் பெற்றோல் விற்கிறார் என அறிந்து அவரிடம் சென்றேன்

வேலைக்கேற்றபடி தன் வேலையை மாற்றிக் கொண்ட அந்த தனியார் பெற்றோல் வியாபாரியின் தற்காலிக வியாபார நிலையம் ஓலைகளால் வேய்ந்திருப்பதை விழிகளால் மேய்ந்தேன்! அதிர்ந்தேன்!!

யாராவது ஒருவர் அணையாத சிகரெட்டை அங்கே எறிந்தால், எரிந்து முடிந்த எண்ணெய்க் கிணறாகவே அவ்விடம் மாறும்.

அவரது வியாபாரம் பற்றி வினவியபோது அவர் தந்த பதில் என்னைத் தெளிய வைத்தது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றோல் விற்றாலும் உத்தியோகத்தர் பலர் அங்கே கியூவில் நிற்க விரும்பாது அதிக விலைக்கு எம்மை நாடுகின்றார்கள்.

பேட்டி: எஸ். ஜே. பி. ரட்ணதுரை

சில மோட்டார் கார்க்காரர்களும், மோட்டார் சைக்கிள்காரரும் 'செட்டில் லீற்றர் 17 ரூபா 50 சதமாக வாங்கி எம்மிடம் 25 ரூபாவுக்கு தருகிறார்கள், நாம் அதை 30 ரூபாவுக்கு விற்கிறோம் என்றார்.

மூவர் நிலைய முகாமையாளர்

எரிபொருள் நிரப்பும்

(7ஆம் பக்கம் பார்க்க)

அகோர வெயிலை சமாளிக்க...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

உணவு வித்தியாசமாக இருக்கவேண்டும். பச்சைக் காய்கறிகளையும் கீரை வகைகளையும் அதிகமாகசேர்த்துக்கொள்ள வேண்டும். மச்சம், மாமிச வகைகளை தவிர்க்கவேண்டும் காரமாகவும் அதிக சூடாகவும் உணவு உண்ணக்கூடாது பழைய சோறு, தயிர் என்பன உணவில் சேர்த்துக்கொண்டால் உடல் குளிர்ச்சியாக இருக்கும்

வீட்டு முற்றத்தில் மரங்கள் இல்லாதவர்கள்; முற்றத்தில் தண்ணீர் தெளித்தோ அல்லது பூச்சாடிகளை யன்னல்களுக்கருகில் வைத்தோ வீட்டைக் குளிர்மையாக்கலாம் குழந்தைகளை வெயிலில் அலையவிடாமல் மின்விசிறிக்குக்கீழ் இருக்க வைத்தல் நல்லது.

மேசை விரிப்புக்கள் மின் விளக்குகள், யன்னல் திரைகள் என்பவற்றை, கண்ணுக்குக் குளிர்ச்சியான நீலம், பச்சை நிறங்களில் வைத்துக்கொள்வது நல்லது

கோடை காலத்தில் தூக்கம் அதிகம் வரும். களைப்புத்தான் இதற்குக் காரணம். எனவே கோடையில் பகலிலும் ஒருசில மணித்தியாலங்கள் தூங்கலாம். படுக்கையை வெறும் தரையில் போட்டுத் தூங்குவது மிகவும் நல்லது வெப்பக்காற்று மேலே கிளம்பக் குளிர்ந்த காற்று சூழ்ந்து நின்று இதம் அளிக்கும்.

வெப்பம் மிகுந்த நாட்களில் கடற்கரைக்குச் சமீபமாக செல்வதோ, கடலில் குளிப்பதோ மிகவும் தீங்கானது. ஏனெனில் அந்நாட்களில் கடற்கரையின் தரைமட்டத்தில் வெப்பநிலை மிக அதிகமாக இருக்கும்.

தாங்கமுடியாத வெயில் எறிக்கும்போது; குழந்தைகளுக்குப் பக்கத்தே வெங்காயத்தை நறுக்கி வைத்தால் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படாது.

அதிகமான வெப்பமுள்ள நாட்களில் சிறிது வேப்பம்இலைகளை வாயில் போட்டு மென்று; சிறிதளவு சாறை விழுங்கிவிட்டு வேப்பிலையை புகையிலையை வாயில் வைத்திருப்பதுபோல் வைத்திருக்கவும் இதனால் எந்தவித வெயில் நேரத்திலும் குளிரூட்டப்பட்ட அறையில் இருப்பது போன்ற குளிர்மையை அனுபவிக்கலாம்

சீர்கெட்ட சீதனப் பிரச்சினை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதில்லை. ஏழைத் தந்தை மணமகன் தேடிச் சென்றுவிட்டால் உன்னிடம் என்ன தகுதி இருக்கின்றதென்று கேட்டு மணமகனின் பெற்றோர் காறி உமிழ்கின்றனர். இந்நிலையில் விரக்தியடைந்த தந்தை காணி பூமியை விற்றாவது மகளை வாழவைக்க முற்படுகின்றான் இந்தநிலையில் வரதட்சணைப் பிரச்சினைக்கு ஆண்களின் பெற்றோர் தான் காரணமே தவிர பெண்களல்ல

மகனைப் பெற்றுவளர்த்ததற்கு, படிப்பித்ததற்கு என்று பெற்றோர் மகனை வைத்து விலைபேசுகின்றனரே தவிர பெண்ணின்பெற்றோர் தாமாகக் கொடுப்பதில்லை. சில ஆண்கள் காதலித்து விட்டு தாம் சீதனத்தை எதிர்பார்ப்பதில்லை என்றும் அம்மாவுக்கு அல்லது தங்கைக்காக ஒரு 50,60 கொடு என்று கதைவிடுகின்றனர். இதற்கெல்லாம் யார் காரணம்? பெற்றோரா? பெண்களா? இவையெல்லாம் ஆண்களும் அவர்கள் பெற்றோரும் ஆடும் திருவிளையாடல்களே.

ஆண்கள் தங்களுக்கே உரிமை என்று நினைத்து அவனது தாயார் வீட்டுக்கு ஒன்றும் கொடுக்க விடுவதில்லை அதனால் தான் ஆண்கள் சீதனத்தை வாங்க முயன்றுள் என்றும் குறிப்பிடப்பட்டது. இது உண்மையல்ல இது சகோதரியின் கற்பனை. இது உண்மையெனில் இன்று பெண்கள் ஏன் மாமியாரால் அடிமைப்படுத்தப்படுகின்றனர்? காசுகொடுத்து வாங்கிய பொருள் என்றாவது கடைக்காரனுக்குச்சொந்தமாவதா? சீதனம் கொடுத்து வாங்கிய கணவன் மட்டும் பெற்றோருடன் நின்று மனைவியை வதைப்பது எதற்காக? சகோதரியின் கருத்து உண்மையாக இருந்திருந்தால் சீதனம் வாங்கிய ஆண்கள் தமது தாய்மாருடன் சேர்ந்து மனைவியை வெறுப்பதும் பிரிவதும் இன்றைய சமுதாயத்தில் நடக்கக் கூடாதே சீதனமாக ஒருதொகையை வாங்கித் தாயாரிடம் கொடுத்துவிட்டு பின்பும் உழைத்து பெற்றோர் வீட்டுக்கே கொடுக்க முற்பட்டால் எந்த மனைவியும் பொறுக்கமாட்டாள்

ஆடம்பரச் செலவு செய்யும் மனைவியரைப் பார்த்துத்தான் நீ என்ன சீர்வரிசை கொண்டுவந்தாய்? என்று ஆற்றாமையில் கேட்கிறார்களா? அப்படியெனில் கணவனுக்கு மேலான சம்பளம் எடுத்தும் வரவிற்கேற்ற செலவு செய்யும் பெண்களிடம் வாங்கிய சீதனத்தை இந்த ஆண்கள் திருப்பிக் கொடுக்கலாமே?

இன்றைய பெண்கள் சீர்வரிசை பற்றித்தான் கற்பனை செய்வார்களா? சகோதரியே! இது உமக்கெழுந்த கற்பனையோ தெரியவில்லை எந்தவொரு பெண்ணும் தம் பெற்றோரை வருத்திப் பிழிந்து தான் சுகமாக வாழ நினைக்கமாட்டாள் பெண்விடுதலைக்காக வேண்டிநிற்கும் சமுதாயத்தில் பெண் சுதந்திரமாய் வாழ நினைப்பாளே தவிர அடிமைப்பட நினைக்க மாட்டாள். பணம் கொடுத்து மணம் முடிப்பதையும் விரும்பமாட்டாள். ஆனால் சமுதாயத்தில் ஆண்களின் பெற்றோர் தமது பிள்ளைகளின் விலையைக் கூட்டி விடுகின்றார்கள் கேட்பதைக் கொடுக்காவிட்டால் தமது பெண்ணுக்கு வாழ்வில்லையே என்ற ஏக்கத்தில் கேட்கும் தொகையைக் கொடுக்கப் பெண்களின் பெற்றோர் சம்மதிக்கிறார்கள். இதுதான் அவர்கள் செய்யும் தவறு.

சமூகத்தில் கொஞ்சம் பெண்கள் சுதந்திரமாகத் திரிவதால் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பினை உதறிவிட்டார்கள் என நினைப்பதா? சகோதரியே ஏன் உமக்கு இவ்வளவு பொறாமை இல்லாததையெல்லாம்எழுத உமக்கு எப்படி மனம் வந்தது?

*

காலத்தால்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

உண்மையாய் இருக்கலாம்.

எகிப்து ஒரு குடியரசு நாடல்ல; அது ஒரு முடியரசு நாடு. அங்கே அரசன் இட்டது சட்டம் அதுமட்டுமல்ல எகிப்தியர் அரசனைத் தெய்வத்துக்கு சமமாகவே மதித்து வந்தனர். இது அவர்கள் மனதில் பழமை தொட்டே ஊறிவந்துள்ள எண்ணம்.

அலெக்சாந்தரின் மரணத்துக்குப் பிறகு எகிப்தை ஆண்டுவந்த கிரேக்கர்களாகிய டாலமி வமிசத்தாரும் எகிப்தியக் கருத்துக்களையும், பழக்கவழக்கங்களையும்தழுவி ஒழுகிவந்தனர். இந்த டாலமி வமிசத்தைச் சேர்ந்தவள்தான் கிளியோபாத்திரை ஆகவே அவள் ஒரு கிரேக்க அல்லது மாசிடோனிய அரசிளங்குமரியாவாள்.

அரசன் தெய்வாம்சம் பொருந்தியவன் என்னும் எகிப்தியக் கொள்கை ரோமுக்குச் சென்று அங்கு நிலை பெற்று விட்டது இதற்குக் கிளியோபாத்திரை உதவியாயிருந்தாளோ இல்லையோ தெரியாது

குடியரசு நடைபெற்றுக்கொண்டிருந்த சீஸர் காலத்திலேயே அவனைப் போல் உருவச்சிலைகள் அமைத்து அவற்றை மக்கள் வழிபட்டு வந்தனர். ரோமச் சக்கரவர்த்திகளைப் பொறுத்த வரையில் இவ்வழக்கம் வாலாயமாக மாறின விதத்தைப் பின்பு பார்ப்போம்.

(தொடரும்)

வீடியோவை...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

களையே பாதிக்கின்றது.

இந்நோய் ஒளி உணர்வுத் தன்மையை அடிப்படையாகக் கொண்டதால் இக்கருவியை இயக்கும் இளவயதினரையே பாதிக்கின்றது. வீடியோ திரையில் ஒளிக்கோடுகளையோ உற்று வெகுநேரம் காண்பதால் எபிலேப்டோஜினிக் விளைவு (epileptogenic effect)

(மிகுதி அடுத்தவாரம்)

தமிழக நாவல்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

இவையெல்லாம் தமிழில் உரைநடை எழுதுவது அதிலும் நாவல் எழுதுவது அது துவங்கிய காலத்தில் உற்சாகமாக வரவேற்கப்படவில்லை என்பதையும் அப்படி எழுதுவது ஒரு தாழ்வான இலக்கிய முயற்சியாகக் கருதப்பட்டது என்பதையும் நமக்குத் தெரிவிக்கின்றன. ஆனால் நூற்றாண்டுகளில் நிலைமை தலைகிழாய் மாறிவிட்டது நாவல் - அதாவது தொடர்கதை - இல்லாமல் பத்திரிகை வெளிவருவது என்பது இன்று நினைத்துக் கூட பார்க்க முடியாததாகி விட்டது.

பத்திரிகைத் தொடர்கதை என்பது நாவல் இல்லை என்று சில விமர்சகர்கள் சொல்லிவருகின்றார்கள். ஆனால் உண்மை என்னவெனில் தமிழின் இரண்டாவது நாவலே, பத்திரிகையில் தொடராக எழுதப்பட்டது தான். வேதநாயகம் பிள்ளைக்குப் பிறகு பதினாலு வருஷம் கழித்து ராஜமையர், கமலாம்பாள் சரித்திரத்தை 1893 இல் எழுதுகிறார். அது விவேகசிந்தாமணி பத்திரிகையில் தொடர்கதையாக வெளியாகிறது

அப்போதும்கூட நாவல்களுக்கு வரவேற்பு பெருகிவிடவில்லை என்று தான் தோன்றுகிறது காலம் சென்ற ராஜமையர் புதிதாகத் தமிழ்க் கதை எழுதுவதில் உண்மையான திறமை காட்டியிருக்கிறார் அவருக்குத் தகுந்த சன்மானமில்லை. ஆதலால் அவர் அந்தத் திறமையை மேலும் வளர்த்துக் கொண்டு போக இடம் இல்லாமல் ஆரம்பத்திலேயே கைவிட்டு இங்கிலிஷ் மாதப் பத்திரிகை நடத்தப் போய்விட்டார் என்று பாரதியார் 1910 ஆம் வருஷம் சுதேச மித்திரனில் எழுதியிருப்பது இதற்குச் சான்று.

ஆரம்ப காலங்களில் தமிழில் நாவல்களை எழுதியவர்கள் நன்கு படித்த அறிஞர்கள். சமூகத்தில் நல்ல அந்தஸ்து வகித்தவர்கள். வேதநாயகம்பிள்ளை முன்சீபாக வேலைபார்த்தவர். வெள்ளைக்காரன் ராஜ்ஜியத்தில் முன்சீபிற்கு இருந்த அதிகாரமும் அந்தஸ்தும் மிக அதிகமானவை.

ராஜமையரும் நல்ல படிப்பாளி. விவேகானந்தர் தம்முடைய அமெரிக்க விஜயத்துக்கு பின் சென்னையில் தொடங்கிய பிரபத்த பாரதா என்ற பத்திரிகைக்கு விவேகானந்தராலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர். மாதவையா. பண்டித நடேச சாஸ்திரியார், குருஸ்வாமி சர்மா போன்றவர்களும் சாதாரணமானவர்கள் அல்ல, பத்மாவதி சரித்திரம் எழுதுகிற காலத்திலேயே 'இளாரிந்தா' என்று முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே ஒரு நாவல் எழுதியவர் மாதவையா. இவர்கள் ஆங்கிலப் படிப்பு படித்திருந்தாலும் அதன் விளைவாக தமிழில் புதுமையாக எழுதவேண்டும் என்று விருப்பப்பட்டு நாவல் எழுத முயற்சித்திருந்தாலும் எழுதுகின்ற விஷயம் சமூகத்திற்கு நல்ல பயன் தரக்கூடியவையாக இருக்க வேண்டும். நல்ல கருத்துக்களை ஜனங்களுக்குச் சொல்ல வேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் கொண்டிருக்கிறார்கள்

மோசமான உதாரணங்களாகத் திகழக் கூடிய பாத்திரங்களைக் கொண்ட ஆங்கில நாவல்கள் பல இருந்தபோதும் இளைஞர்களும் அனுபவமற்ற வாசகர்களும் அதைப் பின்பற்றிக் கெட்டு விடக்கூடாதென்று தம் பாத்திரங்களை மேன்மை பெற்றவர்களாகப் படைத்திருப்பதாகச் சொல்கிறார், வேதநாயகம்பிள்ளை தமிழில் முதல் நாவலை எழுதியவர்க்கு எத்தனை பொறுப்புணர்வு.

பெண்கல்வி, விதவைத் திருமணம் ஆகிய சமூக சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்து மீனாஷி நவீனத்தை எழுதினார் மாதவையா. இவ்விதம் எழுதியதற்காக இந் நாவலைக் கண்டித்து எழுதியது இந்து' பத்திரிகை

இவ்விதம் ஒரு வித லட்சியத்தோடும், புதுமைநோக்கோடும், படிப்பாளிகளால் துவக்கப்பட்ட நாவல் இயக்கம் பெறும் பொழுது போக்கு விஷயமாகத் தடம் மாறிப் போனது எவ்விதம்?

இது குறித்து மூன்று பார்வைகள் என்ற விமர்சன நூலில் அசோகமித்திரன் என்ன கூறுகின்றார் என்று பார்ப்போம்.

(வளரும்)

கறிவேப்பிலை

கறிவேப்பிலைத் துவையல் குடல் நோயுள்ளவர்களுக்குப் பயனளிக்கவல்லது. இது குடலுக்கு வலுவூட்டும் பத்தியச்சமையலில் கறிவேப்பிலைத் துவையலுக்குத் தனியிடமுண்டு உணவுக்கு மணமூட்டச் சேர்க்கப்படும் கறிவேப்பிலை இலைகளை உணவுக்கு மணமூட்டிய பின் நீக்கிவிட வேண்டியதில்லை. அதனையும் சேர்த்து உண்பதே சிறந்தது இதனால் ஜீரண உறுப்புக்களில் உண்டாகும் குறைகளை இக்கீரை நீக்கிவிடுகின்றது. நல்ல பசி, சுவை, சீரண சக்தி ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது இயற்கை வழங்கும் மூலிகைச் செல்வங்களில் கறிவேப்பிலை முன்னணியில் திகழ்கிறது.

ஏழாலை சைவ அபிவிருத்திச் சங்கம்

சைவப் பணியில்

அறுபத்துநான்கு ஆண்டுகள்

ஏழாலை மண்ணுக்குத் தெய்வ ஞானச் சார்பு பெற்ற சைவத் தமிழ்ப் பெரியோர்களின் பரிசம் மிகவும் உண்டு. பெரிய சடைச் சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ யோகர் சுவாமிகள், சடைவரத சுவாமிகள் முதலிய பல் வேறு பெரியார்களின் பாதபரிசம் பெற்ற நிலம், இந்நிலம் இளைஞர் சடைவரத சுவாமிகள் சார்பாக இப்பகுதியில் ஏற்பட்ட தெய்வ ஞான விளக்கம் குறிப்பிடத்தக்க அளவு மகிமை வாய்ந்தது. ஏழாலை மேற்கில் தெய்வீக ஞானஒளி நிலையமாகத் திகழும், சாது சங்க மடாலயத்தின் தோற்றத்திற்கு மூலமானவர். இவர் தலைமையில் இந் நூற்றாண்டின் முற்பகுதியில், தற்போதைய மடாலய வளாகத்தில், வாரா வாரம் ஞாயிற்றுக் கிழமை தோறும் சாது சங்கம் ஒன்று கிரமமாக நடைபெற்று வந்தது.

ஏழாலையில் நாளை 64 ஆவது ஆண்டுவிழா

அதில் பிரபல்யமான ஒருவராயும், சடைவரத சுவாமிகளின் சீடராயும் விளங்கியவர் ஐ பொன்னையா என்னும் இயற் பெயருள்ள திரு. அருளானந்தசிவம் அவர்கள்.

இச்சாது சங்கம் வாயிலாகப் பெரியவர்களிடையே நிலவிய சமய நெறி இப்பகுதியில் வாழும் இளைஞர்களிடத்திலும் நிலைபெற்று வளர வேண்டும் என்ற ஆர்வம் இவர்கள் மூலமாக தலை தூக்கியது.

தாமோதரம்பிள்ளைச் சுவாமியார் இளைஞர் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். முறையான சமய ஒழுக்கப் பயிற்சிகள் மூலம் இளைஞர்களை முன்மாதிரியான மனிதர்களாக உருவாக்க வேண்டுமென்பது அவர் கொள்கை. அவ்வகையில் இப்பகுதி இளைஞர்களை ஒன்றுசேர்த்து அவர்களுக்கு நற்பண்புகள் பயிற்றுதல், தேவாரம் ஓதப்பயிற்றுதல் முதலாம் பணிகளில் அவர் ஈடுபட்டு வந்தார். இத் தேவைகளுக்காகத் தற்போதைய மடாலய வளாகத்தில் கிழக்கு ஓரமாக ஒரு கொட்டில் அமைக்கப்பட்டிருந்தது. இதற்கொரு சங்க அமைப்பு வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படுத்தின அதன் பெறுபேறாக 1922 ஆம் ஆண்டில் சைவ வாலிபர் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கம் உருவாயிற்று.

இப்பகுதிச் சைவப் பிள்ளைகள் அனைவரும், அன்று இச்சபையில், அங்கத்தவராக இருந்தனர். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை தோறும் சமயக் கட்டுரைகள் தவறாது நடைபெறும் ஒவ்வொரு கூட்டத்திலும், பிள்ளைகளின் நடைமுறை, ஒழுக்கநிதிகள் வற்புறுத்தப்படும், இவ்வகையில் அந்நாளில் இப்பகுதிப் பிள்ளைகளிடையே பரஸ்பர ஒற்றுமையும், நன்மதிப்பும் மேலோங்கி வந்தது.

அன்று இச்சங்க ஆண்டு விழாக்கள், மிக உற்சாகத்துடன், சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. ஆண்டு விழாவினை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டி, பேச்சுப் போட்டி என்பனவும் நடைபெறும். அன்றைய ஆண்டு விழாக்களுக்குப் பிரபல்யம் பெற்ற சைவத் தமிழ்ப் பெரியார்கள் தலைவர்களாக நியமிக்கப்படுவர். ஆண்டு விழாக்காலம் அல்லாத காலங்களிலும் சைவப் பெரியார்கள் இச் சங்கத்திற்கு வருகை தந்துள்ளனர். கலாரசனை மிக்க சங்கீத கதாப் பிரசங்கங்களும், பலதடவை நடைபெற்றுள்ளன.

சங்க வளர்ச்சி நிலைக்கும் அங்கத்தவர்களின் அபிலாஷைகளுக்கும் ஏற்ப 1983 ஆம் ஆண்டில், சங்கப் பேரும் சைவ வாலிபர் சங்கம் என ஆயிற்று தன் பழமையான பணியில், சங்கம் தொடர்ந்து இயங்கி வந்தது. அதற்கு மேலாகவும். குறிப்பிடத்தக்க பணிகள், இக்காலப் பகுதியில் இடம் பெற்றன. இக் கிராமத்தின் சில பகுதிகளில், பல வருடங்களாக நடைபெற்று வந்த, ஆடு பலியிடும் வழக்கம், இச்சங்கத்தின் இயக்க மூலம் நிறுத்தப் பட்டது.

பல் சமய நாடகங்கள், இச் சங்கத்தினால் மேடையேற்றப்பட்டுள்ளன.

1958 ஆம் ஆண்டில் இச் சங்கம், ஏழாலை இந்து சமய அபிவிருத்திச் சங்கம் எனப் பெயர் மாற்றமடைந்தது சங்கப் பெயரில், இந்து என்ற சொல் இருப்பதைத் தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது என்று கருதி, 1985 இல் இச்சங்கம், ஏழாலை சைவ அபிவிருத்திச் சங்கம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

இச் சங்கம் 1983 இல் அமெரிக்க சிவாலய சுவாமிகளை, வரவேற்று, ஒரு மாபெரும் சமய விழாக் கொண்டாடியது ஒரு மறக்க முடியாத சிறப்பு நிகழ்ச்சியாகும்.

இன்றும் இன்றைய சூழ்நிலையில், சைவாலயங்களும், சைவக்குரு முதல்வர்களும். அராஜக வழியில், தாக்கப்படுவதை இச்சங்கம் தீவிரமாக எதிர்க்கிறது.

இதனுடைய அறுபத்து நான்காவது ஆண்டு நிறைவு நாளை ஞாயிற்றுக் கிழமை கோலாகலமாக, ஏழாலையில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் கௌரவிக்கப்பட இருக்கும் சுன்னாகம் சதிரமலைச் சிவன் கோவில் பிரதம குரு சிவாகமஞானபானு, முத்தமிழ் குருமணி, சிவஸ்ரீ நா. சர்வேசுவரக் குருக்கள், 34 வயதுடைய இளம் ஆசாரியர். பல ஆசாரிய அபிஷேகங்கள், சிறந்த சிறப்பு நிகழ்ச்சிகள், மகோற்சவங்கள், முதலிய பல கிரிகைகள், சிறப்பாகச் செய்து வருகிறார். ✶

அமரர் செ. சின்னத்துரை

மாகாண சபைகளை . . .

3ம் பக்கத் தொடர்ச்சி) வைக்கும் திடீர் திட்டங்கள் அரசாங்கத்திடம் இல்லை என்பதை எப்படி நம்புவது?

இனப்பிரச்சினை, தங்களின் பிழையான கொள்கைகளினால்தான் ஏற்பட்டது என்பதை இன்னும் சிங்களத்தலைவர்கள் ஏற்பதாக இல்லை

நாகரிக அரசியல் தெரியாதவர்கள்

தங்களின் அரசியல் லாபம் தமிழரை அடக்கி ஒடுக்குவதில்தான் உண்டு என்று சிங்களத் தலைவர்கள் தவறாக எடை போட்டு வைத்திருக்கின்றனர்.

முன்னேறிய நாடுகளில் நடப்பதுபோல, சிறுபான்மையினரை நல்லவிதமாக நடத்துவது நாகரிகமான அரசியல் கொள்கை என்பதை சிங்களத் தலைவர்கள் சிந்திப்பதாக இல்லை.

தமிழர் மத்தியில் உள்ள மிதவாதிகள் சமஷ்டியை விரும்புகின்றனர். இது இரு பகுதியினரும் பரஸ்பர நல்லுறவுடன் உருவாக்கினால்தான் நிலைக்கும். சமஷ்டியை திணிக்கவோ வன்செயலால் பெறவோமுடியாது.

இந்தியாவின் நிலையும், பங்கும்

ஒன்றுமே செய்யமுடியாத கட்டத்தில் "பிச்சை வேண்டாம். நாயைப்பிடி" என்ற மாதிரி புதுடில்லிக்கு ஓடிச்சென்று இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள இலங்கை விரும்பினால், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்படக்கூடுமா?

இந்தியாவுக்கு வேண்டியது எல்லாம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் தன்னுதிக்கம். இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் இந்தியாவின் தனி முதன்மை ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதே.

இலங்கை தனது கேந்திர ஸ்தானத்தைப் பெரிதாக நினைத்துக்கொண்டு இந்தியாவை மதிக்காமல் நடந்துவந்தது அமெரிக்காவை நம்பிக்கொண்டு இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்கவும் இலங்கை தவறியது

அமெரிக்காவின் கையாலாகாத்தன்மையை உணர்ந்துவிட்ட நிலையில் (ரஷ்யாவின் மறைமுகப் பயமுறுத்தல்களையும் மனதில் கொண்டு) இலங்கை தனது வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தினால் போராளிகளின் நிலை என்ன?

சோஷலிச நாடுகளின் உதவிகள் உண்டா? என்பது எமக்குத் தெரியவில்லை. இந்தியாவைத் தவிர்த்துக்கொண்டு, தமிழ்ப் போராளிகளுக்கு உதவி செய்ய ரஷ்யா முன்வருவது சாத்தியமில்லை.

இதை எல்லாம் மனதில் கொண்டுதான் போராளிகள் தங்கள் திட்டங்களை வகுத்திருப்பார்கள் என்று மக்கள் நம்புகின்றார்கள்.

எனினும் போராளிகள் மக்களை நேசிக்க வேண்டும். எமது மக்கள் சமாதானத்தை விரும்புபவர்கள். நெருக்கமான குடும்ப பாசம், பொறுப்பு உடையவர்கள். துன்பத்தை நீண்ட காலத்துக்குச் சகிக்க முடியாது என்பது வெளிப்படை.

சிவில் நிர்வாகம்

சிவில் நிர்வாகத்தை முழுக்க முழுக்க அழிப்பது மிகஇலகுவான காரியம். ஆனால் மக்களின் பொருளாதாரம் (சம்பளம், பென்ஷன், உதவிப்பணம்) நிச்சயம் பாதிக்கப்படும், உணவுக்கப்பல்கள் வராமல் நின்றால் என்ன செய்வது?

எமக்கு உணவில் தன்னிறைவு இல்லையே. மின்சாரம் நின்று விட்டால் எரிபொருளுக்கு என்ன செய்வது? எனவே சிவில் நிர்வாகத்தை முழுக்க முழுக்க ஸ்தம்பிக்கச் செய்தால் உடனடியாக வேறு நாடு எம்மைக் காப்பாற்ற முன்வர வேண்டும்.

அரசாங்கம் எப்படி வங்குரோத்து ஆகிறதோ அதேபோல் தமிழ் மக்களும் வங்குரோத்து ஆகிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். வெளிநாட்டுப் பணம் வருவது குறைந்து விட்டது.

போராளிகள் என்னதான் திறமைசாலிகள் ஆக இருந்தாலும் பொருளாதார நிர்வாக துறைகளில் அனுபவசாலிகளின் அறிவுறுத்தல் நிச்சயம் தேவை

இலங்கை அரசாங்கம் பொருளாதார, நிர்வாக சீர்குலைவு காரணமாக தானாகவே தமிழ் எல்லைகளை விட்டுத் தனது ஆதிக்கத்தை நீக்கிக் கொண்டு விடும் என்று நாம் நம்பினால் அது மிக நீண்ட துன்பம் நிறைந்த பயணமாகவே இருக்கும்.

எரிபொருள்..

(6ம் பக்கத் தொடர்ச்சி) முகவர் நிலைய முகாமையாளர் ஒருவரிடம் வினவியபோது அவர் சொன்னார்:

அரசு வடக்கில் தயாராகும் சிமெந்தைக் கொழும்பில் அதே விலைக்கு விற்கிறது. ஆனால் எரிபொருளை மட்டும் வடக்கிற்கு விலை கூட்டித் தருகிறது.

முன்னர் போக்குவரத்து செலவைக் கூட்டுத்தாபனம் ஏற்றுக் கொண்டது.

பவுசரில் சென்று முன்பு எரிபொருள் நிரப்பி வந்தோம். இப்போது தனியார் லொறிகளிலேயே ஏற்றி வர வேண்டியுள்ளது. தவிர அவர்களுக்கு ஒரு லீற்றருக்கு ஒரு ரூபா கொடுக்க வேண்டியுள்ளது.

மேலும் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின் அநுராதபுரத்தில் கூட்டுத்தாபன நிலையத்தில் எமக்கு எரிபொருள் தர மறுக்கிறார்கள். தனியார் நிலையத்திலேயே நிரப்ப வேண்டியுள்ளது. அங்கே அளவு பிழையாக இருப்பதோடு, கைலஞ்சமும் கொடுக்க வேண்டியுள்ளது.

இதனால் பெருமளவு பணம் இடைத்தரகர்களிடமே செல்கிறது பாதிக்கப்படுவது பொதுமக்கள். எமக்கு லாபமோ குறைவாக கிடைக்கிறது. எனினும் பாவனையாளரிடம் பெரிதாகக் குறை கேட்க வேண்டியுள்ளது.

இது அவரின் விளக்கமும் வியாக்கியானமும்.

சங்கப் பிரமுகர்

வடமாகாண பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனை முகவர்கள் சங்கப் பிரமுகர் ஒருவரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

முன்னர் வடபகுதிக்கு மாதாந்தம் 1666980 லீற்றர் டீசலும், 1555666 லீற்றர் பெற்றோலும், 2103160 லீற்றர் மண்ணெண்ணெயும் கூட்டுத்தாபனம் விநியோகித்தது. கூட்டுத்தாபனம் கைவிட்டதைத் தொடர்ந்து இப்போது இதில் ஐந்திலொரு பங்கு தானும் வருவதில்லை.

சங்கம் பெரும் சிரமத்தின் மத்தியில் ஓரளவாவது கட்டுப்பாட்டு விலையில் எரிபொருள் கிடைக்க வழி செய்துள்ளது.

ஒரு லீற்றர் பெற்றோல் 17 ரூபா 50 சதமாகவும், டீசல் 12 ரூபாவாகவும், மண்ணெண்ணை 10 ரூபாவாகவும் கட்டுப்பாட்டு விலைகளை விதித்துள்ளோம். மீறி விற்போர் மீது கடும் நடவடிக்கை எடுப்போம்.

மேலும் விலையை குறைப்பதற்காக நாம் சில கோரிக்கைகளை இலங்கை பெற்றோலிய கூட்டுஸ்தாபனத்திடம் முன்வைத்துள்ளோம். அவைகளில் சில:

✶ போக்குவரத்து சிரமங்கள் காரணமாய், அநுராதபுரத்தில் வடபகுதி முகவர்கள் கேட்குமளவுக்கு எரிபொருள் வழங்க வேண்டும்.

✶ அநுராதபுரத்தில் எரிபொருளுக்கான பணத்தை காசோலையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பணத்தை வங்கியில் எரிபொருள் விற்று ஒருசில நாட்களுள் செலுத்த அவகாசம் வழங்கவேண்டும். இதனால் வழிப்பறிக் கொள்ளைப்பயம் தவிர்க்கப்படும்.

இக்கோரிக்கைகளையிட்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வடபிராந்திய காரியாலய உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது; அவர் கூறியதாவது;

இக்கோரிக்கைகளை கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொண்டுள்ளது. அக்டோபர் மாதம் முதல் இவை அமுல்படுத்தப் படும் என்றார். ✶

அகிம்சை நெறியில் . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி) நிறைந்து அந்தப் பண்பாட்டாலே இயங்கி இனித்து நின்றது என்பதேயாகும். அத்துடன் பிரித்தானியரின் ஆட்சி எவ்வாறு இந்தியக் கிராமங்களுக்குள் நுழையாது பட்டின அளவில் நின்றதோ அவ்வாறு இந்திய விடுதலை இயக்கமும் அதன் இனிய பயன்பாடும் இருத்தல் கூடாது என்பதுமாம்.

பிரித்தானியருக்கு ஆச்சரியம்

பிரித்தானிய குழு ஒரு கிராமத்திற்குச் சென்றதும் அங்கு பசுமையான வயல் வெளிகளைக் கண்டது அப்பகுதியில் ஓர் உழவனும் உழுது கொண்டிருந்தான். அவனைக் கண்ட பறங்கியர் அவனிடம் அணுகி, 'உங்களை யார் ஆள்வது' என்று கேட்டனர்.

அந்த உழவனோ, யாரோ காந்தி என்றவர் ஆள்கிறார் என்பர், எனக்குச் சரியாகத் தெரியாது' என்றான். அவன் பதிலைக் கேட்டதும் அவர்கள் அதிர்ச்சியாய் அவ்விடம் விட்டு அகன்றனர்.

பின்னர் பத்திரிகைச் செய்தியாளர் முன்னர் தம் பல கருத்துக்களை உரைக்கும் போது அந்த நிகழ்வை வியந்து வெளிப்படுத்தினர். பாருங்கள் காந்தியடிகளின் வாய்மை அந்த உழவனின் வாய் மொழியால் மெய்மையாயிற்று. மக்கள் பணி செய்பவர் மனப் பக்குவம் இவ்வாறன்றோ இருத்தல் வேண்டும்.

நேருவும் காந்தியும்

காந்தியடிகளார் இந்திய விடுதலைப் பணிக்கு ஒரு மாட்டு வண்டியே போதும் என்பாராம். ஜவகர்லால் நேரு மிக வேகமான ஆகாய விமானமும் போதாது என்பாராம்.

இவ்வாறு விரைந்த உணர்வினரான ஜவகர்லால் நேரு மகாத்மாவைப்பற்றி எழுதும் போது; 'நான் அவரை முழுமையாகத் தெளிந்து பின்பற்றவில்லை. தெளிவில்லாமலே வேறு வழியின்றி, மீள முடியாத அவர் மயக்கிலே மடிந்து பின்பற்றி வந்துள்ளேன்' என்று காந்தியடிகளின் மனித மனத்தின் மாசிலாப் பண்பை விளக்குவதன்மூலம் மனிதனுள தனது தகைமையையும் வெகு நுட்பமாகப் புலப்படுத்தி எழுதியுள்ளார்.

காந்தியின் கருத்து

காந்தியார் 'இந்தியாவின் தேசிய அரசாங்கம் எந்தக் கொள்கையைப் பின்பற்றுமோ எனக்குத் தெரியாது. எனது கண்களால் பார்க்க வேண்டும் என்ற ஆசை எவ்வளவோ இருப்பினும், நான் அதுவரையும் உயிர் வாழாது போகலாம். ஒருக்கால் வாழ்ந்தால் நான் நாட்டிற்குக் கூடிய வரை அகிம்சையைப் பின்பற்றுமாறு சொல்வேன். அதுதான் உலக அமைதிக்கும், உலகைப் புது முறையில் அமைத்து நடக்கச் செய்வதற்கும் இந்தியா செய்யும் பெருதவியாய் இருக்கும். இந்தியாவில் போரே தொழிலாயுள்ள இனங்கள் பல இருப்பதாலும், அவர்கள் எல்லோருக்கும் அரசாங்கத்தின் போக்கை நிர்ணயிக்கும் உரிமையிருப்பதாலும் இந்தியாவின் தேசியக் கொள்கை சில மாறுதல்களுடன் இராணுவ முறையைச் சார்ந்ததாகவே இருக்கும். அகிம்சையை அரசியலிலும் வெற்றிகரமாகக் கையாளுவதற்கு இது வரை நாம் செய்துள்ள முயற்சிகள் வீண் போக மாட்டா; உண்மையான அகிம்சையைப் பின்பற்றி நடக்கும் ஆற்றல் வாய்ந்த கட்சியொன்று நாட்டில் இருந்து வருமென்று நான் நம்பிக் கொண்டுதான் இருப்பேன்'

என்று தனது மனித மனத்தின் தலைப்பாட்டைக் கரிசன் பத்திரிகையில் (21-6-1942) எழுதிக் காட்டியும் உள்ளார். எனவே காந்தியாரின் சுயராச்சியம், மனித மனங்களை அகிம்சை வழிக்கே ஆற்றுப்படுத்தும். அந்த சுயராச்சியத்தின் பொதுவுடைமையோ கிராம மனிதர்களை கிளி கொள்ளச் செய்யும் கிம்சைப்படுத்தாத ஒள்ளொளி வெளிப்புக்கே இட்டுச் செல்லும். ✶

அணுகுண்டு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி) மெய்யுணர் வெய்தாக்கடை' என்று கூறியிருக்கின்றார்.

தனது கண்களையோ மூக்கையோ இழந்தால் அதற்காகக் கவலையுற மாட்டாரென்றும் தனது இருதயத்திலிருந்து தெய்வ நம்பிக்கை தகர்க்கப்படுமாயின் தான் மரணித்துவிட்டதற்குச் சமானமென்றும் மகாத்மா சொன்னார்.

ஒன்றே குலம்

பலர் பற்பலவாகப் பாரிற் பகர்வர் உளன் ஒருவனென்றே உணர்— என்ற சுத்தானந்த பாரதியாரின் யோக சித்தி குறளுக்கமைய மகாத்மா ஒன்றே குலம் ஒருவனே தெய்வமென உலகிற் றொண்டாற்றினார். பகவத்கீதை சொன்ன பாதையிலேயே நிலைத்து நின்று வாழ்க்கையில் வெற்றி கண்டார். தன் உயிர் பொருட்டு அவர் அஞ்சியதுங் கலங்கியதுங் கிடையாது. மரணத்திற்குப் பயப்படாமலே என்றும் அறவழியில் நின்று தனது வாழ்க்கையை நடத்தினார் மரணம் கொடியவனுக்கும் நல்லவனுக்கும் வந்தே தீரும்.

வன்செயல் நூலா?

பகவத்கீதையின் அருவுலக் கோட்பாட்டை உணராதோர் அது வன்செயலை ஆதரிக்கும் நூலெனச் சொல்லி வந்தார்கள். ஆனால் மகாத்மாவோ பல ஆதாரங்களை விவரமாகக் காட்டிக் கீதையின் உட்பொருளை உணர்வோர் தெய்வத்தன்மை பொருந்தியவர்களாகவும் ஆத்மீக சக்தியுடையவர்களாகவும் உயிர்களிடத்தில் அன்புடையவர்களாயுமிருப்பார்களென வெளிப்படுத்தியிருக்கின்றார்

"உயிர்களெல்லாந்
தெய்வமன்றிப்
பிறிதொன்றில்லை
ஊர்வனவும் பறப்பன
வும் நேரே தெய்வம்
பயிலுமுயிர் வகை
மட்டு மன்றி யிங்கு
பார்க்கின்ற பொரு
ளெல்லாந் தெய்வங்
கண்டீர்"

என மகாகவி பாரதியும் கீதையின் கருத்துக்களையே சொல்லியிருக்கின்றார். மகாகவியின் பாடல்களிலே கீதையின் கருத்துக்கள் பரவிக்கிடக்கின்றன.

ஒரு மனிதனின் உள்ளத்திலேயிருக்கும் தீய சக்திகளே துரியோதனன் முதலானோர் என்றும் நல்ல சக்திகளே பஞ்சபாண்டவர்களென்றும் அவைகளுக்கிடையில் (அச்சக்திகளுக்கிடையில்) ஒரு மனிதனின் உள்ளத்தில் இடையறாது போர் நடந்து கொண்டிருக்கின்றதென்றும் கீதையின் உட்பொருளுக்கு மகாத்மா விளக்கமளித்திருக்கின்றார்.

மதங்கள் குறித்து தப்புக் கணக்கு

உலகிலுள்ளவெவ்வேறு சமயங்களும் காலப்போக்கில் மாறுதலடைந்து சில சமயங்களே நிலைத்து நிற்க மற்றைய சமயங்கள் அற்றுப் போகுமென யாரும் கருதினால் அது தப்புக் கணக்கென்பது மகாத்மாவின் கருத்து.

சகல மதங்களும் நல்ல போதனைகளையே உலகிற்குக் கொடுப்பதால் சகல மதங்களும் நிலைத்து நிற்க இடமுண்டென்றும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும் அன்பாகவும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் ஒரு கடவுளே உலகிற்கு உண்டென்ற உண்மையை உணர்ந்து வாழமுடியுமென்றும் நம்பினார். சமயங்களுக்கிடையில் உயர்வு தாழ்வு பேசுவோர் அறியாமையுடையோரே என்பது அவர் கருத்து.

சகல மதங்களிலுஞ் சில குற்றங்கள் குறைபாடுகள் உண்டென்பதை அவர் மறுக்கவில்லை. அறிவாளிகள் மதமாற்றஞ் செய்யமாட்டார்கள். உலகில் பலர் சுய நல நோக்குடன் மதம் மாறுகிறார்கள். சிறந்த மத நெறிகள் அரசியலில் புகுத்தப்பட்டாற்றான் அரசியலும் தூய்மையடையுமென்றும் மதம் சேராத அரசியல் ஒரு மரணப்பொறியென்றும் அவர் கருதினார். ✶

தமிழ்...

(6ம் பக்கத் தொடர்ச்சி) போன்ற நார்வகை பயிர்களின் நூல் நூற்றல் போன்ற கைத்தொழில்கட்கு மூலவளங்களாக அமைகின்றன. இவை தவிர தாவரங்களிலிருந்து மருந்துகள், சாயங்கள், மதுசாரம் ஆகியவற்றையும் தயாரிக்கலாம். எம் பிரதேசங்களில் கிடைக்கும் மூலவளங்களை தகுந்த முறையில் சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் உபயோகிப்பதனால் எம்மவர் பல விதங்களில் பயன் அடைவர் என்பது திண்ணம்.

சொற்சிலம்பம்

போட்டி இல. 35



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ....

....

வயது: ....

விலாசம்: ....

....

ஒப்பம்: ....

போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்.

இடமிருந்து வலம்

1 பத்திரிகையின் ஆசிரியரை இப்படியும் அழைப்பர்
5. ஐம்புலன்களினால் உணரப்படும் உணர்ச்சிகளுள் ஒன்று.
7. வயலைப் பேச்சு வழக்கில் நம்மவர்கள் இப்படியும் சொல்வதுண்டு.
9. தொடக்கம்
10. ஒருவகைத் தானியம்
11. விருந்தினன்
13. முடிவு
15. இந்துமதத்தின் உட்பிரிவுகளுள் ஒன்று
18. தமிழர்கள் காணத் துடிப்பது புதிய ....தான்.
19. இது பல சேர்ந்து தான் புத்தகம் உருவாகிறது ஆனால் இங்கு குழம்பி நிற்கிறது.
21. வான வீதியில் தவழ்ந்து செல்வது
22. பிறக்கும் போதே தலையில் எழுதப்பட்டிருக்கும் என்று சொல்லுவார்கள்.
23. எழில்

மேலிருந்து கீழ்

1 மோட்சம்
2. நாள்
3. மனநிறைவு
4. உயிரினங்களின் முயற்சி எல்லாம் இதைத் தீர்ப்பதற்குத்தானே!
6. நண்பகல்வேளை
8. இல்லான்
11. அளவுக்கு மிஞ்சியது.
12. திக்கு
14. பரிகாசம்
16. வியாபாரி
17. வடக்கின் கற்பகதரு தலைகீழாய் நிற்கிறது
20. குரங்கு
21. சென்றடைந்து

சொற்சிலம்பம் இல. 33 விடைகள்

மேலிருந்து கீழ்

1. சந்ததி 2. கலக்கம் 3. வளி 4. திபது 5. திரி 8. கைதி 9. வால் 11. யாகம் 12. தேரை 13. ஆடுகால் 14. ஒய்வு 15. பதவி 16. பதுமை 17. பாசம் 20. ரிஷி

இடமிருந்து வலம்

1. சக்கரவர்த்தி 6. பரி 7. தணிக்கை 9. வாது 10. கதியால் 13. ஆம் 14. ஓரை 15. படு 16. பம்பாய் 18. தகாதது 19. சவுரி 21. வில் 22. மையம்.

சொற்சிலம்பம் இல. 33 பரிசு பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசு:- செல்வி. பூலோகராஜா சந்திரகாந்தா,
136, தேவாலய வீதி,
ஆடியபாதம்றோட், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு:- செல்வன். செ. மதுரநாயகம்
மே/பா:- செபமாலைநாதன்
பெரியவிளான்,
இளவாலை.

மூன்றும் பரிசு;- செல்வி. சுபசீவி தியாகராஜா
1 ஆம் கட்டை,
உடுவில்,
சுன்னாகம்.

✶ குறிப்பு:-
பரிசு பெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர். பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பெயருக்குரியவரே உரிய அடையாளஅத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும் எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

ஓர் நற்செய்தி!

உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் நீலசோப் புதுமெருகுடனும் கூடிய நிறையுடனும் விற்பனையாகிறது!

விலை ரூ 2.00 மட்டுமே

10 மேலுறைகளை அனுப்பி ஒரு மில்க்வைற் செய்தியைப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற்-யாழ்ப்பாணம்.

சஞ்சீவி

27 - 09- 1986 சனிக்கிழமை

சரிவரத் தன் வேலைகளைச் செய்து உண்பவரே திருப்தியுடன் உண்கிறார்கள்; அவர்களே யாவராலும் விரும்பத்தக்கவர்கள்.

— மகாத்மா காந்தியடிகள்

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி 'காந்தி அடிப்பிடி' என்ற நூலை அல்லது அழகிய மகாத்மா காந்தி ஸ்ரிக்கரொன்றைப் பரிசாகப் பெறுங்கள்!

மில்க்வைற்—யாழ்ப்பாணம்.

தமிழ்நாட்டில் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி:

பாட்டன் உறுதிமொழியை பேரன் அமுல் செய்வரா?

உலக உலா

என்.பி.சீலன்

தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் இவ்வாரம் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து பெரும் அளவு வன்முறையில் இறங்கினர்

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொடும்பாவிகளை எரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இச் சம்பவங்களை அடுத்து நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் பரவ ஆரம்பித்த வேளை நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

தமிழ்நாட்டில் ஹிந்தி திணிக்கப்பட மாட்டாது என்ற நேருஜியின் உறுதி மொழி தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்துள்ளதால் கிளர்ச்சியைக் கைவிடும்படி அவர் கேட்டிருந்தார்.

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி படிப்படியாக விசுவரூபம் எடுத்து அண்ணா தி. மு. க ஆட்சிக்கு புதிய அச்சுறுத்தலாக உருவான சமயம் நெடுஞ்செழியன் இந்த வேண்டுகோள் வெளிவந்தது.

முதலமைச்சர் எம். ஜி ஆர். சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றதால் ஆட்சிப் பொறுப்பு தமிழ்நாட்டின் சிரேஷ்ட அரசியல்வாதிகளில் ஒருவரான நெடுஞ்செழியனிடமே விடப்பட்டிருக்கிறது.

இன்று நேற்று ஏற்பட்டதல்ல

தமிழ் நாட்டில் ஹிந்தி எதிர்ப்பு உணர்வு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இந்தியா சுதந்திரம் அடைந்த நாளில் இருந்தே அது இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்தி அறிஞர் அண்ணா தலைமையில் தி மு க அரசை ஏற்படுத்தியதே இந்த ஹிந்தி எதிர்ப்பு உணர்வுதான்.

மத்தியில் ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸின் தோழமைக்கட்சியாக தற்போது அண்ணா தி. மு. க. இருப்பதால் ஹிந்தி எதிர்ப்பு உணர்வு அண்ணா தி. மு. க எதிர்ப்பாக மாறக்கூடாது என்பதில் அ. தி. மு. க தலைவர்கள் அதிக கரிசனை காட்டி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் தற்போது மீண்டும் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஏற்படுவதற்கு மத்திய அரசின் சில நடவடிக்கைகளே காரணம் ஆகும்.

ஒன்று தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படையில் மத்திய அரசினால் தயாரிக்கப்பட்ட புதிய கல்வித்திட்டம் மற்றது ஹிந்தி வாரத்தை ஒட்டி மாநில அரசுகளுக்குப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு

இவ்வாரம் தமிழ் நாட்டில் கிளர்ச்சி தலைதூக்குவதற்கு ஹிந்தி வாரம் தான் தூண்டுகோலாக இருந்தது.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அ தி.மு க. ஆட்சிக்குத் தலையிடி கொடுத்து வந்த பிரதான எதிர்க்கட்சியான தி. மு. க. தற்போது ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் அதிக அக்கறை காட்டி வருகிறது.

புதிய கல்வித் திட்டம்

மாநிலங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதிரிப் பாடசாலைகளை நிறுவுவதே மத்திய அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டம் ஆகும்.

இப்பாடசாலைகள் இந்திய மத்திய கல்வி அமைச்சின்கீழ் இருந்து வரும். ஹிந்தியும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும் .

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திறமையான 560 மாணவர்கள் இந்த மாதிரிப் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவர்.

இமயம் முதல் குமரி வரை தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கும் நோக்கத்துடன் இந்திய மத்திய அரசு புதிய கல்வித்திட்டத்தை வகுத்திருப்பதாகக் கூறப்பட்டாலும் ஹிந்தி மொழி பேசாத தென் மாநிலங்களில் இதற்கு கடும் எதிர்ப்பு இருந்து வருகிறது.

மாநிலங்களின் கல்விக் கொள்கையில் மத்திய அரசு தலையிடக் கூடாது என்ற உணர்வை மத்திய அரசின் புதிய கல்வித் திட்டம் தமிழ்நாட்டில் ஏற்படுத்தி வருகிறது

இந்திய அரசியல் அமைப்பில் கல்வித்துறை பற்றிய முழு அதிகாரங்களும் மாநிலங்களிடமே விடப்பட்டிருந்தன

ஆனால் மத்தியில் முதல் தடவையாக காங்கிரஸ் அரசாங்கம் வீழ்வதற்குக் காரணமாக இருந்த 'நெருக்கடிநிலை' காலத்தில் கல்வி மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் சொந்தம் என்ற சரத்தை இந்திரா காந்தி அரசமைப்பில் சேர்த்திருந்தார்

காங்கிரஸ் தோல்வி அடைந்து 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனதாக் கட்சி கல்வி பற்றிய அதிகாரத்தை மீண்டும் மாநில அரசுகளுக்கே வழங்க நடவடிக்கை எடுத்தது.

ஆனால் அதற்குள் ஜனதா அரசு கவிழ்க்கப்பட்டு மீண்டும் இந்திரா காந்தி பதவிக்கு வந்திருந்தார்

ராஜீவ் காந்தியின் அரசு தொடர்ந்து கல்வித்துறையில் இந்திரா காந்தியின் கொள்கைகளையே கடைப்பிடித்து வருகிறது.

ஹிந்தி வாரம்

தமிழ் நாட்டில் ஹிந்தி எதிர்ப்பு உணர்வை இந்த கல்வித்திட்டம் உருவாக்கிய போதிலும் ஹிந்தி எதிர்ப்பு உணர்வு கிளர்ச்சியாக மாறுவதற்கு ஹிந்தி வாரமே வழிகோலியது.

ஹிந்தி வாரத்தை ஒட்டி சகல கடிதங்களிலும் அரச அதிகாரிகள் ஹிந்தியிலேயே கையெழுத்திட வேண்டும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தது.

இதனை ஆட்சேபித்தே இவ்வாரம் தமிழ் நாட்டின் பல மாவட்டங்களிலும் மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.

மாணவர்களின் கிளர்ச்சிக்கு சமீபத்தில் டில்லி உயர் நீதிமன்றம் ஒன்று அளித்த தீர்ப்பும் காரணம் ஆகும்.

மாநிலங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் 15 சதவீதம் அனுமதி அகில இந்திய ரீதியில் இடம்பெற வேண்டும் என்பதே அந்தத் தீர்ப்பு

இதன்படி தமிழ்நாடு மருத்துவக்கல்லூரி மாணவர்களில் 15 சதவீதமானோர் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பர்.

தமிழ்நாட்டின் மருத்துவக் கல்லூரிகளில் ஆங்கிலத்துடன் தமிழையும் போதனா மொழியாகக் கொண்டு வருவதற்கு தமிழ்நாடு அரசாங்கம் ஆலோசித்துவரும் இவ்வேளையில் டில்லி உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்திருக்கிறது.

இவற்றுடன் மத்திய அமைச்சர்களின் சிலரின் ஹிந்தி ஆதரவுப் பேச்சுக்களும், டில்லியில் நடந்த திரைப்படக் கலைஞர்களுக்கான பரிசளிப்பு விழா ஹிந்தியில் நடைபெறுதலையிட்டு ஜனாதிபதி ஜெயில்சிங் கவலை தெரிவித்ததும் மத்திய அரசின் போக்கில் தென் மாநிலங்களில் சந்தேகத்தை உருவாக்கி உள்ளன.

இவற்றை எல்லாம் நிவர்த்தி செய்து பாட்டனார் (நேரு) அளித்த உறுதி மொழியை பேரனார் (ராஜீவ்) இதய சுத்தியுடன் அமுல் நடத்துவாரா? என்பதே இன்றுள்ள கேள்வி ஆகும்

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் செல்வதற்கு உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

★ கனடா
★ ஜேர்மன்
★ பிரான்ஸ்
★ டென்மார்க்
★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும் பாஸ்போட், விசா, பொன்ட், BOND ரிக்கட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

தமிழ்மொழி மாநிலத்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் திரு எம். சிவசிதம்பரம், அரசியல் குழு உறுப்பினர்கள்: இரா சம்பந்தன், வெ. யோகேஸ்வரன்

தமிழக முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் சனிக்கிழமை புதுடில்லி வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றும் கட்டப் பேச்சுக்களில் ஐந்து தமிழ்ப் போராளி அமைப்புக்களின் தலைவர்களையும் பங்கு பற்ற வைக்கும் முயற்சியும் முதலமைச்சர் எம் ஜி ஆர் புதுடில்லியில் தங்கி நிற்கும் சமயம் மேற்கொள்ளப்படும் என்று தெரிகிறது. (உ-எ)

பிறந்தநாள் வாழ்த்து

27 9 86

திவாகரன்

வல்வெட்டித்துறை காசிலிங்கம் — கிருஷ்ணகுமாரியின் செல்வப் புதல்வன் திவாகரன் இன்று முதலாவது பிறந்தநாளை இந்தியாவில் கொண்டாடுகிறார் அவரை அப்பா, அப்பாச்சி, சுற்றத்தார் எல்லாம் வாழ்த்துகிறார்கள்.

ஆளுங்கட்சி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தரங்கமாக ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.

இதுபற்றி அரசாங்க உயர்மட்டத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (இ-உ)

வல்வையில் உண்ணாவிரதம்

வல்வெட்டித்துறை, செப் 27

பூஸாவிலும் வெலிக்கடையிலும் உண்ணாவிரதப் போர் நடத்தும் தமிழ் கைதிகளுக்கு ஆதரவாக இன்று வல்வெட்டித்துறை கொற்றாவத்தையில் உண்ணாவிரதம் நடத்தப்படவிருக்கிறது.

கலைவாணி கல்வி நிலைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட பெருந்தொகையான பொதுமக்கள் உண்ணாவிரதத்தில் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது (உ-160)

பிரியாவிடை

சுன்னாகம், செப். 27

சுன்னாகம் பட்டண சபையில் 14 ஆண்டுகளாக பணியாற்றி வவுனியா நகரசபைக்கு பதவி உயர்வுடன் மாற்றலாகிச் சென்றுள்ள திரு இ. இராமலிங்கத்துக்கு இன்று சனிக்கிழமை பிரியாவிடை வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

மாலை 4.00 மணிக்கு உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையில் சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் பாராட்டு விழாவும் பிரிவுபசாரமும் நடைபெறும் (வி-27)

பொன்விழா...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்திச் சங்கத்திற்கு எழுதிக் கொடுத்தார். அதன்பின் பாடசாலை பதிவு செய்யப்பட்டு "இந்து போர்ட்'' பாடசாலையாக நடத்தப்பட்டது

1934ல் சித்தியவான் கணபதிப்பிள்ளை அவர்களின் மனைவி "சின்னம்மா'' இறந்தபடியால் அம்மையாரின் பெயரை இப்பாடசாலைக்குச்சூட்டி "சின்னம்மா வித்தியாசாலை'' என அழைக்கப்பட்டு வருகின்றது மேலும், சித்தியவான் கணபதிப்பிள்ளை திரு நெல்வேலி "இந்து போர்ட்'' சைவ அனுதை இல்லத்திற்கு ஓர் கிணறு அமைப்பதற்கு 1930ல் பணம் வழங்கி உதவியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1963ல் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட "இந்து போர்ட்'' நிர்வாகப் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும்.

"சித்தியவான் கணபதிப்பிள்ளை'' அவர்களின் மகன் டாக்டர் செல்லத்துரை அவர்களின் மகள் "சாரதமணி'' அதிபராக கடமையாற்றி சிறப்பாக நடத்தி வருகின்றார்.

சட்டத்தரணி:

உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப் 27

வெலிக்கடை, பூஸா சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் கைதிகளுக்கு ஆதரவாக நேற்று குடாநாட்டில் பரவலாக உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது

இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கான ஏற்பாடுகளை தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கான இணைப்புக் குழு மேற்கொண்டு வருகிறது

நேற்று யாழ். கச்சேரிக்கு அண்மையில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

(உ-10)

சிறை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது.

இதேவேளை உண்ணாவிரதப்போரைக் கைவிடுமாறு கோரித் தமிழ்மக்களின் சார்பில் துண்டுப் பிரசுரம் ஒன்று தமிழ்க் கைதிகளிடம் அதிகாரிகளினால் கொடுக்கப்பட்ட [illegible] அதனை அவர்கள் கிழித்து [illegible] எறிந்ததாகவும்— தெரிவிக்கப்படுகிறது.(உ

இருபக்க நெருக்குதல்களை சமாளித்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசால் முடியுமா....?

உள்ளும் புறமும்

குறுமுனி

புதுடில்லியில் போராளிகளைச் சந்திக்க வேண்டிய அவசியம்; தென் இலங்கையில் எதிராளிகளை சமாளிக்க வேண்டிய தேவை

இந்த இக்கட்டான நிலையில் இலங்கை அரசு சிக்கியுள்ளது.

புதுடில்லிச் சந்திப்பில் தமிழ் மொழி மாநிலக் கோரிக்கையைச் சமாளிக்க வேண்டும்.

தென் இலங்கையில் மாகாணசபை யோசனையை ஏற்கவைக்க வேண்டும்.

இந்த நிலைப்பாடுகளுக்கு இடையேயான முரண்பாடுகளை எப்படி இலங்கை அரசு சமாளித்து தீர்வு ஒன்றைக் காணப் போகிறது?

இந்தக் கேள்விக்கு விடைகாணும் காலம் இவ்வாரம் தொடங்குகின்றது.

புதுடில்லிச் சந்திப்பு.

1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில், தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்ட சமயம் அப்போது 'தம்பிகளின்' அபிமானத் தளபதியாக விளங்கியவர் திரு. அ. அமிர்தலிங்கம்.

பிரசாரக் கூட்டம் ஒன்றிலே பேசுகையில் திரு. அமிர்தலிங்கம் ஒரு கருத்தை அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்

"இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை அப்படிப் பேச்சுக்கள் நடத்தப்படுமானால் அது தமிழீழ எல்லைகளை நிர்ணயம் செய்யும் பேச்சுக்களாகவே அமையும்''

-இதுதான் திரு அமிர்தலிங்கம் அன்று சொன்னது.

இடையில் காணப்பட்ட நிலைதளர்வு, கொள்கைக் குழப்பங்களினால் 1977இல் கூறியதை 'அழுங்குப் பிடி'யாக பிடித்துக்கொள்ள திரு. அமிர்தலிங்கத்தினால் முடியாமற் போயிற்று.

'திரு ஜெயவர்த்தனவுடன் நாம பேச்சுக்கள் நடத்துவதானால் அது தமிழீழத்தின் எல்லைகளை நிர்ணயிப்பதாகவேஇருக்கும்''—என்று இன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கூறியிருக்கிறார்.

திம்புவில் தமிழர் அமைப்புக்கள் முன் வைத்த நான்கு அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக் தான் இலங்கை அரசுடன் பேசுவோம் — இப்படி தமிழ்ப்போராளி அமைப்புக்கள் அறிவித்துள்ளன

இந்தியாவின் எந்தப் பகுதிக்கும் சென்று போராளிகளுடன் பேச்சுக்கள் நடத்த இலங்கை அரசு தயார் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாக ஒரு தகவல் வந்துள்ளது.

இதுவரை பேசியது

அதிகாரப் பகிர்வு சம்பந்தமான விஷயங்களைப்பற்றிப் பேசுவதில்தான் அரசும் கூட்டணியும் பெரும்பாலான நேரத்தைச் செலவு செய்தன.

இனித்தான் அமைப்பு, அதற்கான எல்லைகள் பற்றிப் பேசவேண்டும். போராளிகள்தான் அது பற்றிப் பேசவேண்டும்— கூட்டணியின் நிலை இது என்றே தெரிகிறது.

அப்படியிருந்தும் புதுடில்லிப் பேச்சுக்களில் தமிழ் மொழிப் பிராந்தியத்துக்குக் குறைவான எதுவும் முன்வைக்கப் படப்போவது இல்லை

மாகாணசபைக்கே சிங்களவர் மத்தியில் எதிர்ப்பு இருக்கும் போது. இலங்கை அரசாங்கத்தின் அளவுகோல், புதுடில்லியில் எந்த அளவுக்கு நீளப்போகிறது?

தென்னிலங்கைச் சமாளிப்பு

இந்த நிலையில்....

மாகாண சபையை எதிர்த்து மகா சங்கம் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறது

போதாக் குறைக்கு அமரர் பண்டாரநாயக்காவைக் கொலை செய்தவர்கள் இரண்டு பௌத்த பிக்குகளே என்று தர்மிஷ்டர் சொல்லப் போய், அது மகா சங்கத்துக்கு மனக்கோபத்தை ஏற்றிவிட்டிருக்கிறது

'விட்டேனாபார்' என்ற விதத்தில் மகாசங்கம் தற்போது தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது

மகாசங்கத்தின் சார்பில் தீவிரமாகச் செயல்படுகிறார் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்.

மாகாணசபை வந்தால் தமிழீழம் வழங்கியதாக முடியும் என்று எழுத்தில் எமக்கு அறிவித்தவர் ஜனாதிபதி

இன்று மாகாணசபை வந்தால் தமிழீழம் வராது — என்று கூறுவதை எப்படி நம்பலாம்?

இவ்வாறு அஸ்கிரிய தேரர் கேட்டிருக்கிறார்

''[illegible], இப்போது எல்லாம் சொல்லேன் என்ன போராட்டம் என்பதை அன்றுதான் சொல்வேன் — அதில் குதிக்கத் தயாராக இருங்கள் என்பதை மட்டும் இன்று கூறுகிறேன்'' — இப்படி அஸ்கிரிய தேரர் போராட்டப் பறைக் கட்டத்தில் கூறி விட்டார். இதனிடையில் சமாதான முயற்சிகளைப் பாழடிக்க முயற்சிப்பவர்களை விசாரித்த குற்றவாளியாகக் கண்டால் 'போகம்பரையில்' அடைக்கப் போவதாக அரசு அறிவித்து விட்டது.

சமாதான முயற்சிகளைப் பாழடிப்பவர்களைக் குறித்து விசாரணை செய்ய விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது

கடந்த ஜூலையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளைப் பாழடிக்க எடுக்கப்படும் முயற்சிகள் பற்றி மட்டும் தானா இந்த ஜனாதிபதி ஆணைக்குழு விசாரிக்குமா?

இலங்கை இனப்பிரச்சினை தொடங்கிய காலம் (1957) முதல் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளை பாழடிக்க முயற்சி செய்து வெற்றி கண்டவர்கள் பற்றியும் இந்த ஜனாதிபதி ஆணைக்குழு விசாரித்து நடவடிக்கை எடுக்குமா?

அதற்கும் வழி செய்யுமாற்போல் ஆணைக்குழுவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் நல்லது என்பது அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

அன்று சமாதான முயற்சிகளைக் குழப்பி ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று சமாதான முயற்சிகளைக் குழப்புபவர்களுக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதிக்கப்போகிறார்களாம் என்னே காலத்தின் விந்தை.

''தன் வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்''- என்பது அனுபவ மொழி அல்லவா?

ஆயுள்வேதம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ச்சி தரப்படுதல் அவசியம். ஆயுள்வேதவைத்தியத்தைத் தரம் குறைந்ததாகப் பார்க்கும் இப்போதைய பழக்கம் கைவிடப்பட வேண்டும். ஆயுள்வேத வைத்தியர்களுக்கு சமூகத்தில் உரிய மதிப்பளிக்கப் படவேண்டும்.

ஆயுள்வேத வைத்தியத்தை உரிய முறையில் செய்வதற்குத் தேவையான மூலிகைகள் கிடைக்காமல் இருப்பதும் இப்போதைய பெருங்குறைகளில் ஒன்றாகும்.

இதனைத் தவிர்க்கும் முயற்சிக்கு இன்று கால்கோள் நடக்கிறது. அது மகிழ்ச்சிக்கு உரியது ஆயுள்வேத மூலிகைத் தோட்டம் கைதடியில் ஆரம்பிக்கப்படுகிறது. மூலிகைச் சந்தையும் சாவகச்சேரியில் திறக்கப்படுகிறது.

ஆயுள்வேத மருந்துக்குத் தேவையான மூலிகைகள் தாராளமாகப் பயிர்செய்யப் படவேண்டும். அப்போதுதான் அவை சந்தையில் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழி பிறக்கும். அதன்மூலம் ஆயுள்வேத மருந்துகளை இலகுவில் வைத்தியர்கள் தயாரிக்க முடியும். அதனால் ஆயுள்வேத மருந்துகள் சிரமமின்றிக் கிடைக்க ஏதுவாகும்

ஆயுள்வேத மூலிகைத் தோட்டங்கள், சந்தைகள், கிராமங்கள் தோறும் உண்டாக்கப்படுவது எந்நாளோ? . .!

ஆயுள்வேத வைத்தியத்திலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுதல் அவசியம் அவ்வாறு செய்வதன் மூலம் அக்கலைப் பேணி வளர்த்து மேம்படுத்தலாம்.

நீத்தார் பட்டியல்

வல்வெட்டித்துறை

வ. வ. இராமசாமிப்பிள்ளை

முன்னாள் அம்மன் கோவில் மணியமும் பிரபல வர்த்தகரும் ஆர் வி ஜி பீடிக்கம்பனி ஸ்தாபகரும், காலம் சென்ற இராசரட்ணம் அவர்களின் அன்புக் கணவரும் ஆனந்தவேல், சுமனாம்பிகை, நடனசிகாமணி, மகேஸ்வரி, வைத்திலிங்கம், இரத்தினசிகாமணி, காலம் சென்ற சிவஞானசுந்தரம், தமயேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற வெங்கடாசலம், நடனசிகாமணி, பொன்னுச்சாமிப்பிள்ளை, இராஜரட்ணம், இரத்தினேஸ்வரி ரூபசவுந்தரி அம்மாள், காலம் சென்ற சீதாலட்சுமி, சந்திரமணி ஆகியோரின் மாமனாரும் ஆகிய வ. வ இராமசாமிப்பிள்ளை அவர்கள் காலமாகி விட்டார்.

ஈமக்கிரியைகள் இன்று 27 - 09 - 86 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஊறணி மயானத்தில் நடைபெறும். உற்றார் உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

ஆர் வி. ஜி நிர்வாகம்
275 பீச் ரோட்,
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீடு திகதி 27 . 09 . 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, Jaffna.